## பூநகரி ராணுவ முகாம் சம்பவம் தாக்கப்பட்ட 2 இளைஞர்கள் பலியானார்கள்

மலர் 29 ஆடி 22 துல்ஹஜ் 11 இதழ் 168
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-8-1987

(அலுவலக நிருபர்)

பூநகரி இராணுவத்தினரின் தாக்குதலுக்கிலக்கானதா க ப் புகார் செய்யப்பட்ட இரு இளைஞர்களும் பலியானார்கள என்று அஞ்சப்படுகிறது.

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் குறிப்பாக இந்திய அமைதிப் படையினரின் வருகையின் பின் இடம்பெற்ற இலங்கை இராணுவத்தின் முதலாவது மோசமான தாக்குதல் சம்ப ம் இதுவாகும் என்று புகார் செய்யப்படுகிறது.

இத்தாக்குதல்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரி 4ம் கட்டையில் முகாமிட்டுள்ள இராணுவ முகாமில் மேற் கொள்ளப்பட்டமை தெரிந்ததே.

இராணுவத்தினரின் கடுமையான தாக்குதலுக்குப்பின் பலியான இரண்டு இளைஞர்களும் ஈழப்புரட்சி ஈரோஸ்) அமைப்பைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்தின் போ பலியான இருவரில் ஒருவர் மன்னார் பிரதேச ராணுவ ஆணையாளர் தேவதாஸ் (தேவா) (வயது 35) நான்கு பிள்ளைகளின் தந்தை மன்னாரைச் சேர்ந்தவர் மறைவர் கைதடியைச் சேர்ந்த குகன் (வயது 17) ஆகிய இருவருமாவர். (வா)

## 9ல் ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நிராயுதபாணிகளாகச் சென்ற ஈழப் புரட்சி அமைப்பு [ஈரோஸ்] போராளிகள் இருவர் பூநகரியில் முகாமிட்டிருக்கும் இலங்கைப்படையினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தால் அநுஷ்டிக்கப்படவுள்ளதாக 'ஈரோஸ்' அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றில்

(5ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம்

[கொழும்பு]

உத்தேச மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் வரையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கென ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த ஜனாதிபதி ஜெயவர்த்தன கொள்கை அளவில் முடிவுசெய்துள்ளார்.

மேற்படி நிர்வாக அமைப்பில் மூன்று சிவில் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும், இன்னும் சிலதினங்களில் இவ்விபரம் பகிரங்கப்படுத்தப்படுமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த நிர்வாக அமைப்புக்கு உதவியாக ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்படுமென்றும் ஆலோசனை சபை தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைந்திருக்கும் என்றும் அறியப்படுகின்றது.

(5-ம் பக்கம் பாாக்க)

## நெடுந்தீவு கடலில் மீனவர் தாக்கப்பட்டனர்!

(அலுவலக நிருபர்)

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளர்கள் மூவரைக் கைதுசெய்த கடற்படையினர், அவர்களைக் கடுமையாகத் தாக்கி நையப்புடைத்ததுடன் இயந்திர வள்ளத்தில் இருந்த 4000 ரூபா பெறுமதியான திசையறி கருவியையும், பெறுமதியான மணிக் கூட்டையும் அபகரித்துள்ளனர்!

இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி இந்திய அமைதிப்படையினர் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் இச்சம்பவம் நெடுந்தீவுக் கடலில் நடைபெற்றுள்ளது.

குருநகரை சேர்ந்த ப. துரை (23 வயது), கெனியூட் சா பன் [23 வயது], ஒரு குழந்தைக்குத் தந்தையான செ. இரத்தினம் [30 வயது] ஆகிய மூன்று கடற்றொழிலாளர்களே இப்பரிதாப சம்பவத்துக் கிலக்கானார்கள்.

"நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இயந்திரப் படகில் மீன் பிடிக்க மூவரும் சென்றோம். நெடுந்தீவுக் கடலில் ரோந்து சென்ற கடற்படையினர் எங்களை

(5ம் பக்கம் பார்க்க

## 500 பேர் கைது

[கொழும்பு]

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து தென்மாகாணத்தில் சுமார் 500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## காவலூரில் இந்திய ராணுவ முகாம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் பணிமனையில் சுமார் 25 இந்திய ராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

நேற்று 11 மணியளவில் இந்திய ராணுவத்தினர் இங்கு வந்து சேர்ந்தனர்.

ஏராளமான பொதுமக்கள் இந்திய ராணுவத்தினரைப் பார்க்க வந்ததுடன் அவர்களோடு மகிழ்ச்சியோடும் அளவளாவினார்கள்.

## "நாட்டின் இறைமையை ஜனாதிபதி பாழடித்துவிட்டார் – சிறிமா சாடுகிறார்

[கொழும்பு

"நாட்டின் இறைமையை ஜனாதிபதி ஜெயவர்த்தன பாழடித்துவிட்டார்" என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளதுடன் இந்தியாவின் குடையின்கீழ் இலங்கையைக் கொண்டுசென்றுவிட்டார் என்றும் சாடியுள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

## ★ தடுப்பு முகாம்களிலிருந்து 3800 தமிழ்கைதிகள் விடுதலை!

### 500 பேர் இன்று யாழ் வருவர்

(கொழும்பு)

தமிழ்ப் போராளிகள் என்ற சந்தேகத்தின்பேரில் இதுவரைகாலமும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த மூவாயிரத்து எண்ணூறுபேரை விடுவிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நடவடிக்கையின் முதற்கட்டமாக சுமார் ஐநூறுபேர் இன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று அரசதரப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## குமாரணதுங்கா 10ல் யாழ் வருகிறார்

[யாழ்ப்பாணம்]

இலங்கை இராணுவத்துடனான மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ராணுவத்தினரையும், பொலிஸாரையும் பார்வையிடுவதற்கு அவர்களது பெற்றோர் இன்றுமாலை யாழ்ப்பாணம் வருவார்கள் எனத் தெரியவருகிறது

தனியார் பஸ்ஸில் வரும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துத் தமது பிள்ளைகளை விடுதலை செய்வதுபற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

இதேவேளை இம்மாதம் 10ம் திகதி சிறிலங்கா மக்கள் கட்சி

(5ம் பக்கம் பார்க்க)

லங்கா சீமெந்து லிமிடெட்
Lanka Cement Ltd.
அறிவித்தல்

சகல ஆலை ஊழியர்களும், துறைமுக ஊழியர்களும் இன்று (7-8-87) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் எமது பிரதான வாயிலில் சமுகமளிக்கவும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிடெட்,
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

[சி-1992]

## கோட்டை ராணுவம் வெளியேறியது

[யாழ்ப்பாணம்]

யாழ் கோட்டை ராணுவ முகாமிலிருந்த இலங்கை இராணுவத்தினரை இந்திய அமைதிப்படையினர் பாதுகாப்பாக நேற்று பலாலிக்கு அழைத்துச்சென்றனர்.

யாழ். கோட்டையிலிருந்து நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் பத்து ட்ரக் வண்டிகளில் காங்கேசன்துறைவீதி வழியாக இவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இலங்கை ராணுவத்தை ஏற்றிச்சென்ற 'டரக்' வண்டிகளின் முன்பாகவும்பின்புறமாகவும் இந்திய அமைதிப்படையினர் பாதுகாவலுக்குச் சென்றனர்.

இவர்கள் அனைவரும் கொழும்புக்கு அனுப்பப்படவிருந்தனர். [வா]

## மாகாணசபைத் தேர்தல்: கூட்டணி முடிவுசெய்யவில்லை

(நமது நிருபர்)

உத்தேச மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி இன்னமும் முடிவு செய்யவில்லை.

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் இலங்கை திரும்புவதற்கு முன்னர் சென்னையில் கூடி இலங்கையில் வதிப்பிடப் பிரச்னை குறித்து ஆராய்வார்கள் என்று தெரியவருகிறது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஜோஸ்யரின் சனி மாற்றம் இரண்டாம் பதிப்பு சனிக்கிழமை முதல் கிடைக்கும். விலை மூன்று ரூபா. பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். சி-0204

எம்மிடம் செம்பு அலுமினிய வார்ப்புக்கிடாரம், குடம், கேத்தல், எவர்சில்வர் பித்தளைப் பாத்திரங்கள் இந்து, கிறிஸ்தவ கோவில்களுக்கு தேவையான சகலவிதமான பொருள்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ், 26B, மானிப்பாய். கிளை:76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சி-0195

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பஸ் நிலையத்துக்கு மிக அருகாமையில் ஒரு வீடு விற்பனைக்குண்டு. வர்த்தகர்க்கு உகந்தது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இல. சி-0202 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-0202

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்பக்கல்லூரிஆகியவற்றுக்கு அருகாமையில் 2½ பரப்பு நிலம் விற்பனைக்குண்டு தொடாபு கொள்ளவேண்டிய முகவரி: எஸ். சிறிகாந்தன், மணியகாரன் லேன், வட்டுமேர்கு, வட்டுக்கோட்டை. சி-0203

வவுனியா குருமன் காட்டில் அசிஆலையும், சகலவசதிகளும் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி உ. யோகராசா, தாசன் மில், மன்னார் றோட், குருமன்காடு, வவுனியா. சி-0193

நல்லின பொமினேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 37, மாட்டின்ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-0209

Biraha Farms Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hybro புறொயிலர் குஞ்சுகள் 7-ந் திகதி வெள்ளிககிழமை விநியோகிக்சப்படும். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (சி-0211)

சிங்கர் தையல் மெசின் உடன் விற்பனைக்குண்டு. 41, பழைய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். சி-0212

பிடவைக் கடைக்கும், மற்றும் தேவைகட்கு கண்ணடி அலுமாரி. 7 அடி உயரம் 12 அடி நீளம். தொடர்பு: குட்லக் ஹோட்டல், ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். [சி-0147]

புறொயிலர்இறைச்சிக்கோழிகள் (Broilers), சேவல், விருத்துச்சேவல், முட்டை, கோழித்தீன் முதலியன விற்பனைக்குண்டு. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-0140

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன் சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-0130

Nallur Farm Centerபேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 12-08-87 புதன்கிழமை விநியோகிக்கப்படும். உடன் பதிவு செய்யவும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் லேன், நல்லூர். சி-0162

## தேவை

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கில் இருக்கும் திரு. தர்மராஜா அவர்களுக்கு சகலவசதிளுடன் சிறிய வீடு அல்லது வீட்டின் ஒரு பகுதி தேவை. சி-0160

Kitchen Helper, Steward உடன்தேவை. நேரில் காலை 9 மணிக்கும்—10 மணிக்கும் இடையில் தகைமைகளுக்கான பத்திரங்களுடன்வரவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற், 168, கோவில் வீதி, யாழ்ப்பாணம் சி-0185

ஸ்ரோர்ஸ் கணக்காளராகப் பணியாற்றுவதற்குA/Lபடித்த பெண் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். சி 0200

இறைச்சிக்குகோழி தேவை. எவ்வகை இனங்களாயினும் பல விலைகளிலும் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 19, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-0210

உதவி மனேஜர், தேநீர் தயாரிப்பாளர், மேல் நாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பாளர்கள் ஆகியோர் தேவை. காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் ஜனந், சாவகச்சேரி. [சி-0170]

## 45-வது நாள் நினைவஞ்சலி



**சின்னப்பு அண்ணாமலை**

மண்ணுலகிற்கு: 05-08-1910

விண்ணுலகிற்கு: 25-06-1987

திதி: 07-08-1987

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தே' எங்கள் குல விளக்காய் விளங்கிய அன்புத் தெய்வமே நீங்கள்மறைந்து 45 நாட்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றுமே அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல காரைநகர் ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களை இறைஞ்சுகிறோம். உங்கள் பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார்,
உறவினர்

புதுறோட்சந்தி,
காரைநகர். (சி 0197)

## அகதிகளுக்கு உடுபுடவை

(பலாலி நிருபர்)

சங்கானைப் பகுதியில் அகதிகளாக இருக்கும் மக்களுக்குச் சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாகத் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுபிடவைகளை வழங்கியுள்ளது.

வலிகாமம் வடக்குப்பகுதி மக்களே மிகக் கூடுதலாக இப்பகுதியில் அகதிகளாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை இல: 0169 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். சி 0169

CD 185/200 மோட்டார்சைக்கிள் மட்காட், சைட்கவர், 185 Batch தேவை. ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்குமுன்.] சி-0206

வானொலிப் பெட்டிகள் பழுது பார்ப்பவர்கள் (Radio-Technician) தேவை. காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் தொடர்பு கொள்ளவும். ரெலி கோணர், சாவகச்சேரி. [சி-0171]

நன்கு அனுபவம் உள்ள சமயல் வேலைதெரிந்தவர்கள், வெயிற்றர்வேலை தெரிந்தவர்கள், குளிர்பானம் தயாரிப்பதில் நன்குஅனுபவம் உடையவர்களும் விரும்பத்தக்கது. நேரில்வரவும். றிக்கோஹோட்டல், 370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். சி-0187

ரியூப் உடைந்த ரெலிவிசன், பாவிக்கமுடியாத, பாவிக்கக்கூடிய ரெலிவிசன், வீடியோடெக் உடன் தேவை. விபரங்களிற்கு Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம். சி-0208


## சேவை

சகல புகைப்படக் கருவிகளும் (Cameras) மற்றும் T.V., Deck தொலைக்காடசிக் கருவிகளும் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். "கணா" (Gana), இல. 9, கல்லூரி ஒழுங்கை, (கொக்குவில். (இந்துக் கல்லூரி அருகாமையில்) (சி 020)

## தவறிவிட்டது

அல்வின் புஸ்பாக் ஸ்கூட்டரின் 9ஸ்ரீ9883 பதிவுப்புத்தசம், கற்லொக், இன்சூரன்ஸ், டக்ஸ் மற்றும் யஸ்ரின் பஸ்தியாம் பிள்ளை என்னும் பெயர் கொண்ட றைவிங் லைசன்ஸ் புத்தகமும் கடந்த ஒருமாத காலமாக காணமல்போய் விட்டன. இதுவரை எடுட்டதற்கு முயற்சி எடுத்தும் கிடைக்கவில்லை. கண்டெடுத்தோர் தயவுசெய்து 37, மாட்டீன் ஒழுங்கையில் லைடன் ரீ ஸ்ரோரஸ், அல்லது மொடல் மாக்கற் கடையிலோ ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி-0167

புதியநிலையிலுள்ள OER.22-78 என்ற இலக்கத்தையுடைய [Eastern] சைக்கிள் ஒன்று 4-8-87 அன்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் தவறுதலாக எடுக்கப்பட்டுள்ளது. இதை தவறுதலாக எடுத்தவர்களோ அல்லது இதைப்பற்றி அறிந்தவர்களோ கீழ்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும்: சன்மானம் வழங்கப்படும். கே. மோகனசுந்தரம் (மோகன்) புதிய மரக்கறி மாக்கெட், யாழ்ப்பாணம் சி-0201



பலாலி இராணுவமுகாமில் விடுதலைப்புலிகள் ஒப்படைத்த ஆயுதங்கள் (50 கலிபர்) இந்தியஅமைதிகாக்கும் படையினரின் வாகனங்களிலிருந்து இறக்குகின்றனர். (மா)

# பண்ணைப்பாலம் ஊடாக விரைவில் போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணைப்பாலம் ஊடாக தீவுப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவையை கூடிய விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைஎடுக்க இருப்பதாக இந்திய யாழ். கோட்டைமுகாம் பொறுப்பதிகாரி கோணல் எச். எஸ். கில் தம்மைச்சந்தித்த தீவுப்பகுதி மக்கள் பிரதிநிதிகளிடம்உறுதி அளித்தார்.

யாழ் போதனா வைத்திய சாலைக்குவந்த இந்திய இராணுவ அதிகாரிகளிடம் தூதுக்குழுவினர் மேற்படி கோரிக்கையை விடுத்த போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதேவேளையில் தீவுப்பகுதி சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயலாளர் திரு. இ. சற்குருநாதன். வடபிரதேச கோண்டாவில் சாலை அதிபர் திரு. எஸ் சொக்கலிங்கத்தை நேரில்சந்தித்து இது பற்றிக் கேட்டபோதுபண்ணைப்பாதை போக்குவரத்துக்குத் தயாராக இருக்குப்பட்சத்தில் உடனடியாக பஸ்சேவையை ஆரம்பிக்கத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

### இலங்கை — இந்திய சமாதான உடன்பாடு:

# "ஜனாதிபதியின் உள் நோக்கத்தை பாரதம் புரிந்துகொள்ளவில்லை"

### — தமிழர் முன்னேற்றக் கழகம்

[யாழ்ப்பாணம்]

'இலங்கையின் இனப்பிரச்னையை இலங்கை அரசு எல்லோரையும் ஏமாற்றும் வண்ணம்பயன்படுத்தி வந்துள்ளது. இலங்கை ஜனாதிபதியின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ள இந்தியா தவறி விட்டது'

இவ்வாறு 'தமிழர் முன்னேற்றக் கழகம் இந்தியத் தூதர் திரு.ஜே என். டிக்ஸிற்றுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

இக் கடிதத்தில் அக்கழகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை-இந்திய உடன்பாட்டை, இப்பிரச்னையில் பாதிக்கப்பட்டவர்களான தமிழர்களுக்குப் பகிரங்கமாக வெளியிடவில்லை. இவ்வுடன்படிக்கையைப் பொறுத்தவரையில் தமிழ்ப் போராளிகள் இதில் கைச்சாத்திடவில்லை. எனவே வேறு இருவரால் கையெழுத்திடப்பட இதில் கூறப்பட்டுள்ளபடி போராளிகள் தமது ஆயுதங்களை ஒப்படைக்கத் தேவையில்லை

இவ்வுடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் இடம் பெறும் மறைமுக சிங்களக் குடியேற்றம் பற்றி இதில் ஒன்றும் குறிப்பிடவில்லை. இது தமிழ்ப் பகுதிகளில் சிங்கள வாக்காளர் தொகையை அதிகரிக்கும் நடவடிக்கையாகும்.

இதுபற்றி இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இதனைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் இந்திய பிரதமர் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என இவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லை. ஆனல் அது நடந்து விட்டது. [ஊ]

# கண்ணிவெடிகளை அகற்ற இந்திய இராணுவத்தை நாடுங்கள்

### தளபதி கூறினராம்

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில் இலங்கை இராணுவம் நிலைகொண்டிருந்த இடங்களில் அவர்களால புதைத்துவைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் குறித்து அச்சம் கொண்டிருக்கும் மக்கள் அவற்றைக்கண்டு பிடிப்பதற்கும் அகற்றுவதற்கும் தம்மை நாடுமாறு இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீர்சிங் பொதுமக்களைக்கேட்டுள்ளார்.

இத்தகவலை வல்வெட்டித்துறை தெற்கு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. கு. செல்வச்சந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து திரு. செல்வச்சந்திரன் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த வீடுகளிலும், பாதைகளிலும் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடிகளினால் வீடுகளைபபார்க்கச் சென்ற பலர் உயிரிழந்ததையும் படுகாயமடைந்ததையும் இந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீர் சிங்கிடம் எடுத்துக் கூறப்பட்டது.

வீடுகளிலும், பாதைகளிலுமுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு உதவிதேவைப்படுவோர் அண்மையிலுள்ள இந்திய இராணுவ முகாமிற்குச் சென்று குறிப்பிட்ட இடங்க

[5ம் பக்கம் பார்க்க]



நீங்கள் இங்கு அவதானிப்பது... யாழ். நகரில் கம்பீரமாகக் காட்சியளித்து, படையினரால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்தின் முகப்புத் தோற்றம்தான்! அடுத்த இரு படங்களும் நூலகத்தின் எரியுண்ட உள்தோற்றங்கள். (படங்கள்: தேவா)

## ராணுவ முகாமில் வெள்ளைக் கொடி

[கிளிநொச்சி]

ஆனையிறவு இராணுவ முகாமில் வெள்ளைக் கொடி ஒன்று பறக்கவிடப்பட்டுள்ளது:

இதேவேளையில் தடைமுகாமில் வழமையான வாகன, பிரயாணிகள் சோதனை இடம் பெறுகின்றன.

## கோரிக்கை

பலாலி, வெள்ளி.

யாழ். மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கையின்போது உயிர்ச்சேதம் ஏற்பட்ட, உடல் ஊனமுற்ற அதிபர்கள், ஆசிரியர்களின் விபரங்களை உடனடியாகத் தமக்கு அனுப்புமாறு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

# வளைகுடாவுக்கு அமெரிக்காவின் நீர்ச்சுழியோடிப் படைகள்!

வாஷிங்டன், ஆக - 6

**வளைகுடாப்பகுதிக்கு 'சீல் ரீம்' என்ற [SealTeam] அமெரிக்காவின் நீர்ச்சுழியோடிப் படைப்பிரிவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க கடற்படையின் ஒரு விசேடபிரிவான இந்த 'சீல் ரீம்' ஈரானின் வளைகுடா அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதையடுத்தே அங்கு விரைந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.**

இந்த 'சீல் ரீம்' சுழியோடிப் படைப்பிரிவுகள், வளைகுடாவில் ஏற்கனவே நிலைகொண்டுள்ள அமெரிக்க கடற்படையுடன் சேர்ந்து கொள்ளலாம்.

இந்த விசேட பிரிவுக்குத் துணையாக அமெரிக்க கடற்படை ஹெலிகாப்டர்கள் பலவும் வளைகுடாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் விசைப்படகுகள்கொண்ட ஒரு அணியும் வளைகுடா செல்கின்றது.

இதேவேளை ஈரான் மூன்றுவது நாளாக 'ஒப்பரேஷன் மோட்டர்டாப்' என்ற அதன் கடற்படை ஒத்திகையை நேற்று நடத்தியது.

இந்த ஒத்திகையில் ஆயிரக்கணக்கான ஈரானியகடற்படையினர் கலந்து கொண்டனர்.

தற்கொலைப்படைகள் படகுகளில் வெடிபொருள்களை நிரப்பிச் சென்று தாக்கும் ஒத்திகைகளும் இடம்பெற்றன.

இதுதவிர ஏவுகணைத் தாக்குதல் மற்றும் நீர்மூழ்கித் தாக்குதல் என்பன குறித்த ஒத்திகைகளையும் ஈரான் மேற்கொண்டது.

## தமிழகத்தில் 16-ந் திகதி------ இலங்கை - இந்திய ஒப்பந்த விளக்கக் கூட்டங்கள்

சென்னை, ஆக 6

இலங்கை - இந்திய சமாதானத் திட்ட ஒப்பந்தத்தை விளக்கும் வகையில் எதிர் வரும் 16 ந் திகதி தமிழகம் முழுவதிலும் பரவலாகப் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுங்கட்சியான அகில இந்திய அண்ணா திராவிடக் கழகம் இந்த கூட்டங்களுக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் இந்த கூட்டங்களில் விளக்கிக் கூறப்படும்.

## 'ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்பும்----- சோவியத் துருப்புகளுக்கு தகுந்த புனர்வாழ்வு இல்லை' பெற்றோர் கண்டனம்

மாஸ்கோ, ஆக 6

ஆப்கானிஸ்தானிலிருந்து நாடுதிரும்பும் சோவியத் துருப்புகள்மீது பாரபட்சம் காட்டப்படுவதாகவும், அவர்களுக்கு தகுந்த புனர்வாழ்வு திட்டங்கள் ஏற்படுத்தப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்பும் சோவியத் துருப்புகளின் பெற்றோர்களே இக் கண்டனங்களை வெளியிட்டு சோவியத் பத்திரிகையான 'பிராவ்தா'வுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதங்களில் தெரிவித்திருப்பதாவது: "ஆப்கானிஸ்தானில் இருந்து நாடு திரும்பும் சோவியத் இராணுவத் துருப்புகள் ஏனைய சோவியத் நாட்டுப் பிரஜைகள் பெறும் வசதிகளைவிட குறைவான வசதிகளையே பெறுகின்றனர். இவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள்".

உடல் உறுப்புக்களை இழந்து வரும் வீரர்களுக்கு தகுந்த சிகிச்சைகளோ, பராமரிப்போ கிடைப்பதில்லை. வீடுகள்கூட அவர்களுக்கென்று இல்லை.

காயமுற்ற வீரர்கள் பலர் பண்ணை விடுதிகளில் தங்கியுள்ளார்கள். சோவியத் அதிகாரிகள் அவர்கள்குறித்து பாராமுகமாகவே இருக்கின்றனர் என்று தெரிவிக்கபபடடுள்ளது.

## றீகனுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு ஓர்ட்டேகா தயார்

மனகுவா, ஆக. 6

அமெரிக்க அதிபர் றொனல்ட் றீகனுடன் நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தை நடத்துவதற்குத்தாம் தயாராகஇருப்பதாக நிக்கரகுவா அதிபர் டானியல் ஓர்ட்டேகாதெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

அமெரிக்க அதிபர் நிக்கரகுவா பிரச்னை தீர்வுதொடர்பாக புதிய சமாதானத் திட்டம் ஒன்றை முன்வைத்தமையடுத்தே திரு ஓர்ட்டேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

றீகனுடனான பேச்சுக்களை மனகுவா, வாஷிங்டன் அல்லது உலகின்வேறு எப்பகுதிகளிலாவது நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக திரு. டானியல் ஓர்டேகா தெரிவித்துள்ளார்.

திரு றீகன் தமது புதியசமாதானத்திட்டத்தில் போர் நிறுத்தம், அவரகாலச்சட்ட நீக்கம், பொதுத்தேர்தல்கள் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் என்பனபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

திரு. றீகன் தமது நிபந்தனைக்குட்படாத பட்சத்தில் தாம் பேச்சு நடத்தப்போவதில்லை என்றும், 'கொன்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்க உதவிகளை மேலும் வழங்கும் ஓர் உத்தியாகவே புதிய சமாதானத்திட்டத்தை அவர் முன்வைத்துள்ளதாகவும், திரு. ஓர்ட்டேகா குறிப்பிட்டுள்ளார்.

## எம். ஜி. ஆர். அமெரிக்கா பயணமானார்!

சென்னை, ஆக 6

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் மருத்துவ பரிசோதனைக்காக நேற்று அமெரிக்கா பயணமானார்.

திரு. இராமச்சந்திரனுடன் அவரது மனைவி ஜானகியும், 8 பேர்கொண்ட டாக்டர்குழுவொன்றும் அமெரிக்கா சென்றது.

முதலமைச்சரை தமிழக ஆளுநர் எஸ். எல். குரானா, உட்பட தமிழக அமைச்சரவை உறுப்பினர்கள், எம். பிகள் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்.

திரு. எம் ஜி. இராமச்சந்திரன் அமெரிக்காவிலிருந்து தமிழகம் திரும்பும்வரை தமிழ்நாடு மாநில அரசின் முதலமைச்சர் பொறுப்புக்களை நிதியமைச்சர் இரா நெடுஞ்செழியனே கவனித்துக்கொள்வார்.

திரு. எம். ஜி. ஆர். அமெரிக்கா செல்லும் வழியில் புதுடில்லியில் தரித்துச் செல்கிறார்.

## தென்பகுதி கலவரங்களில்------ பட்டதாரி மாணவர்கள் 25 பேர் பலி!

(கொழும்பு)

தென்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைக் கலவரங்களில் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் 25 பேர் வரை கொல்லப்பட்டதாக அஞ்சப்படுகிறது.

இந்திய-இலங்கை அரசுத் தலைவர்கள் கைச்சாத்திட்ட புதிய உடன்படிக்கைக்கு எதிராக 1ம் திகதி களனி பல்கலைகழக மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பின்போது பல்கலைக்கழக வளவினுள் 20 மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். வேறு சில சம்பவங்களில் ஏனைய பல்கலைக்கழங்களை சேர்ந்த ஐந்து மாணவர்கள்கொல்லப்பட்டனர்.

தென்பகுதிக் கலவரங்களில் பொதுமக்களும், பொலிசாருமாக 75பேர் வரை கொல்லப்பட்டதாகவும் 200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

## தனிமையில் வசித்து வந்த வயோதிப மாது கொலை? கொள்ளையர்கள் கைவரிசை

(பலாலி)

தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண்மணி ஒரு வகை கூரான ஆயுதம் ஒன்றினால் குத்தி அறை ஒன்றினுள் போட்டு பூட்டிய இனந்தெரியாத நபர்கள் வீட்டிலிருந்த பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்ற சம்பவத்தின்பின் மறுநாள் புதன்கிழமை (நேற்று முன் தினம்) இரவு குறிப்பிட்ட வீட்டில் வசித்த வயோதிபப் பெண் பூட்டிய அறையிலிருந்து உறவினர்களால் பிணமாக இரத்தக்கறையுடன் மீட்கப் பட்டார்.

சண்டிலிப்பாய், கல்வளையில் இடம்பெற்ற இத்துணிகர சம்பவத்தில் திருமதி சோமசேகரம் மீனாம்பிகை என்ற 62வயது வயோதிப பெண் மணியே மரணமானவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ராஜீவைத் தாக்கியவரின் தாய் மன்னிப்புக் கோருகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைக் கொலைசெய்ய முயன்ற கடற்படைச் சிப்பாயின் தயார் நடந்த சம்பவத்திற்காக மகன் சார்பாக இந்தியப் பிரதமரிடமும் இலங்கை ஜனாதிபதியிடமும் மன்னிப்புக் கோரியுள்ளார்.

சிப்பாயின் தாயாரான திருமதி ஏ நந்தாவதி மெண்டிஷ் தமது கவலையையும் தமது குடும்பத்தினரின் கவலையையும் கடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் தெரிவித்துள்ளார்.



யாழ். மாநகர சபையின் தோற்றத்தையும்; புல் பூண்டு, செடி - கொடி வளர்ந்து குட்டிக் காட்டுப்பகுதியாக காட்சிதரும் யாழ். விளையாட்டரங்கையும், சுப்பிரமணியம் பூங்காவையும் இங்கு காணலாம்.

### மணிவாக்கு

துன்பம் பொறுமையையும், பொறுமை அனுபவத்தையும், அனுபவம் நம்பிக்கையையும் உண்டாக்குகிறது.

— பைபிள்

## நமது நோக்கு

# மதத்தின் பேரில் சகோதரக்கொலை!

உலகம் கண்ட மதங்களில் இஸ்லாமைப்போல் சகோதரத்துவத்தை வற்புறுத்தும் மதம் வேறெதுவும் இல்லை.

சகோதரத்துவம் என்ற இலட்சியம் பிரெஞ்சுப்புரட்சிக்கு உதவிய முப்பெரும் இலட்சியங்களில் ஒன்றென்பதும் குறிப்பிடத்தக்கது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இம் மூன்றும் பதினைன்காம் லூயி மன்னர் ஆட்சியில் அருகிப்போன சமயத்தில் உலகப் புகழ்பெற்ற பிரஞ்சு தத்துவ ஞானிகள் வால்டேரும் ரூசோவும் மக்கள் கிளர்ச்சிக்கு இவற்றை மந்திரமாக வழங்கினர்.

பிரெஞ்சு புரட்சியின்பின் நிகழ்ந்த அமெரிக்க சுதந்திரப்போருக்கு தலைமை தாங்கிய ராணுவத்தலைவர் வாஷிங்டன் இந்த இலட்சியங்களையே சுதந்திர அமெரிக்காவில் அத்திபாரமாக அமைத்தார். பிரான்ஸிலும், அமெரிக்காவிலும் சகோதரத்துவம் பூரணப்படுகிறதா?

பாலைவனத்தில் குழுமியிருந்த மக்களுக்கு மட்டுமல்ல, அகில உலகுக்குமே அரிய உபதேசம் செய்தவர் நபிகள் நாயகம் முகம்மது [சல்]

இஸ்லாமிய நாகரிகம் பரவாத இடம் உலகில் அரிதிலும் அரிது. இஸ்லாமிய சமுதாய வாழ்வில் காணப்படும் கூட்டுவாழ்க்கை, சமூகக் கட்டுப்பாடு இன்றைய உலகிலும் வியப்புக்குரியது.

இன்றைய உலகென்னும் போது, மதவெறியால் மொழிவெறியால் அரசியல் ஆட்சிமுறை வெறியால் நிகழும் அட்டூழியங்கள் என்பது கருத்து

கிறித்துவமதம் ஐரோப்பாவை தீராதபோர்வெறியில் ஆழ்த்திவிட்டது இன்று பழைய வரலாறுக விட்டது.

இரண்டாவது உலகமகா யுத்தம் மத அடிப்படையில் எழவில்லை; மதகோட்பாடு வாழ்க்கையில் குன்றிய நிலைமை அதற்கொரு மறைமுகமான காரணம் எனலாம்.

உலகயுத்தம் ஒன்று மூன்றுவதுமுறை வெடிக்காத போதும் உலகின் பல எல்லைகளில் போரும் கெடுபிடிப் போரும் என்று இன்றும் நிகழ்கின்றன.

ஈரான் - ஈராக் யுத்தம் முடிவுகாணாத வகையில் ஏழுவருட முடிவை எடுக்கிறது. இருநாடுகளும் இஸ்லாமைத்தழுவும் நாடுகள். சகோதரத்துவத்தை உலகுக்கெடுத்துக்காட்டும் விசேட உரிமையுடைய நாடுகள்.

சகோதரர் ஒருவரை ஒருவர் கொல்லுகின்றனரே யென்று, சகோதர நாடுகள் அதனை நிறுத்த உதவுகின்றனரா?

இடம் பொருள் ஏவல் படைத்த வல்லரசுகள் அதனைத் தடுத்துநிறுத்த முயல்கின்றனவா?

ஒற்றுமைப்படுத்தவந்த மதம், பகைமை என்ற மதத்தை அகற்ற முடியாது திண்டாடுகின்றதே! அரசியல் வேறு, மதம் வேறு அல்ல என்ற கொள்கையில் அர்த்தம் உண்டு. மண்ணில் நிகழும் ஆட்சி விண்ணுலக ஆட்சியின் பிரதிபலிப்பாக இருக்கவேண்டுமென்ற கோட்பாட்டைக் குறிக்கின்றது.

வாழ்வில் ஒருமுறையாவது புனித மக்கா நகருக்கு யாத்திரை செய்வது இஸ்லாமியரின் குறிக்கோள். சிதம்பரம் போகாமலிருப்பேனே, ஜென்மத்தை வீணுகக்கழிப்பேனே என்ற நந்தனின் நோக்கத்தை ஒத்தது இது.

இவ்வருடம் புனித மக்கா நகரில் நடந்த கோரக் கலவரத்தைப் பத்திரிகைகளில் படித்தவர்கள் ஹிரோஷிமாவுக்குப் பின் நடைபெற்ற துன்பச்சம்பவம் இது என்று நினைப்பதில் தவறில்லை.

அணுகுண்டுதான் உலகை அழிக்கவல்லது என்ற எண்ணம் இச்சம்பவத்தால் பொய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. யார் யாரைக்கொன்றது? அதன் காரணம் என்ன? அதற்கு மறைமுகமாகக் காணப்படும் அரசியல் பின்னணி என்ன? இவையெல்லாம் உலகம் அறியவேண்டிய விடயங்கள். இவற்றிலும் மிக்க முக்கியமானது புனிததலத்தில் இக்கொலைகள் நிகழ்ந்ததே.

இஸ்லாமின் மறை நூலாகிய குரான் சொல்வது "உள்ளம் இருந்தும் உணராதவர், கண்ணிருந்தும் காணமுடியாதவர், காதிருந்தும் கேட்கமுடியாதவர் மிருகங்களே; அல்லது அவற்றிலும் மொசமானவரே!''

மந்தபுத்தியைக் கண்டிக்கும் இஸ்லாம் மக்கள் ஆட்சி அறத்தில் அமைவதை முற்றுக கட்டாயப்படுத்துகிறது. அறம்வழுவியஆட்சி'ஹெல்ஸ்ஹேயிஸ்' காரை குரங்குசெலுத்துவதற்கு ஒப்பிடப்படுகிறது.

(இன்று நல்லைக்கந்தசுவாமி 8-ஆம் திருவிழா)

## நம்பனே! நல்லைக் கந்தா!!

அல்லலா லவதி யுற்றே.
ஆவிசோர்ந் தலறு கின்றோம்
தொல்லையாற் றுன்ப முற்றே
துடிதுடித் தலறு கின்றோம்
ஒல்லையில் வருவா யோடி
உத்தமி உமையாள் மைந்தா!
நல்லைவாழ் நம்பா! கந்தா!!
நாடினேம் அருள்செய் வாயே!

—கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

## நாத்திகமும் சமயமும்

ஒரு பாடசாலையில் படிக்கும் மாணவன் ஒருவன் பாடசாலை ஒழுங்களைக் கடைப்பிடித்து சிறப்புறுகின்றான் அவனால் அப்பாடசாலையும் பெருமையடையும். அதே பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் பாடசாலை ஒழுங்குகளுக்கு அமைய நடவாமலும் படிப்பில் கவனம்செலுத்தாமலும் சிறுமையுறுகின்றான் இவனால் பாடசாலையும் சிறுமையுறுகின்றது. பாடசாலை ஒழுங்குகளைக் கவனிக்காதவன் என்பதற்காக இம்மாணவன் அப்பாடசாலை மாணவன் அல்ல என்று சொல்லலாகாது. பாடசாலை நிர்வாகம் அம்மாணவனையோ அம்மாணவனே அப்பாடசாலைத் தொடர்பையோ சட்டப்படி துண்டிக்காதவரை அம்மாணவன் அப்பாடசாலை மாணவனேதான். இதே போலத்தான் சைவசமயியாகப் பிறந்த ஒருவன் சைவசமய ஒழுங்குகளைச் சரிவரப் பின்பற்றாதவனாய் இருந்தாலும் சைவசமயி என்றே கருதப்படுவான். ஒருவன் தான் சைவசமயியல்ல என்று சட்டப்படியும் சம்பிரதாயப்படியும் பகிரங்கப்படுத்தாதவிடத்து அவன் சைவசமயியே. நாத்திகம் பேசும் ஒருவன் சமயக்கொள்கையைச் சிறிதுசிறிதாக ஏற்றுக்கொள்ளும்போது பிறமதத்தவன் ஒருவன் சைவசமத்தில் சேர்வதுபோலச் சேராது




சாதாரண சைவசமயிக்கு உரிய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலிருந்து பலர் ஒரே சந்தர்ப்பத்தில் நாத்திகராகவும் சைவசமயியாகவும் இருக்கும் வேடிக்கையை உணரலாம்.

சமயக்கொள்கைகள் கிரியைகள் பற்றிய சந்தேகத்தாலோ சமய வாழ்வில் திருப்தி காணத் தெரியாததினாலோ பலர் நாத்திகம் பேசுகின்றனர். இவர்கள் கடவுள் நம்பிக்கையுடையவராகவும் சமயச்சடங்குகளில் திருப்தியுறாதவர்களாகவுமே காணப்படுகின்றனர் இப்படியானவர்களை உண்மைச் சமயிகளாக விளங்கச்செய்ய வேண்டிய பொறுப்பு சைவ நிறுவனங்களுக்கும் சைவக்குருமார்களுக்கும் உரிய கூட்டுப்பொறுப்பாகும். இக்கட்டுப்பொறுப் பினை இருபிரிவினரும் தட்டிக்கழிப்பதால் சைவசமயப்பாதுகாப்பும் சிறப்பும் உரிமை கோரப்படாத விடயங்களாக உள்ளன. இந்தச் சிறுமையை சைவப்பிரமுகர்களு சைவ அபிமானிகளும் ஒன்றுபட்டு நீக்க முயலவேண்டுமேயல்லாது தனித்து முயன்று வெல்வதரிது.

பிரபல விஞ்ஞானிகளும், அறிவாளர்களும், அனுபவஸ்தர்களும் வற்புறுத்திய சமய அவசியத்தையும் கடவுள் உண்மையையும் கடவுள் அருளையும் கடவுள் இயல்பையும் அறியும் முறையையும் பற்றி பொறுப்பற்ற முறையில் கண்டிப்பதும் வாழ்த்துவதும் என யாராவது இருந்தால் இப்படி இருப்பவர்பற்றி அலட்டிக் கொள்ளாமல் சைவநெறியில் ஒழுகுவது சைவமக்கள் பொறுப்பாகும்.

நீதியால் வாழமாட்டேன்
நித்தலும் தூயனல்லேன்
ஓதியும் உணரமாட்டேன்
உன்னையுள் வைக்க
மாட்டேன்
சோதியே சுடரே உன்றன்
தூமலர்ப்பாதம்
காண்பான்
ஆதியே அலந்துபோனேன்
அதிகைவீரட்டனீரே
—திருநாவுக்கரசர்

அருளாளன்

# கொழும்பு - காங்கேசன் ரயில் சேவை விரைவில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு — காங்கேசன் துறை ரயில்சேவை இம்மாதம் நூறுதிக்குள் ஆரம்பமாகிவிடும் என்று ரயில்வே பதில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வடபகுதி ரயில்சேவை தற்போது கிளிநொச்சிவரை நடைபெற்றுவருகிறது (கே)

# திருமலை அகதிகள் சொந்த இடம் திரும்புகின்றனர்

(அலுவலக நிருப ÷]

திருமலை மாவட்டத்தில் இடம்பெற்றவன்செயல்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாக யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழ் அகதிகள் மீண்டும் தம் சொந்த இருப்பிடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

1981-ம் ஆண்டு முதல் திருமலை மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு சுமார் ஆறுயிரத்துக்கும் அதிகமான பேர் அகதிகளாக இங்கு வந்திருந்தனர்.

இந்த அகதிகளுக்கு, அகதிகள் புனர்வாழ்வு நிதியம், அகதிகள் புனர்வாழ்வு நிலையம், தென் இந்திய திருச்சபை மற்றும் பொதுஸ்தாபனங்களும் உணவு, உடை, இருப்பிடங்கள் வழங்கி உதவிகள் அளித்தன.

திருமலை மாவட்டத்தில் தம் பலகாமம், குச்சவெளி, பன்குளம், கிளிவெட்டி, கிண்ணியா, மல்லிகைத்தீவு, கும்புறுப்புட்டி, கண்ணியா, கங்குவெளி, தெஹிவத்த, முள்ளிப்பொத்தான, மகிந்தபுரம் ஆகிய பகுதிகளிலிருந்தே இந்த அகதிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இந்திய அமைதிகாக்கும் படையினரின் திருமலை வருகையை அடுத்தே இந்த அகதிகள் அங்கு செல்லவிருக்கின்றனர் இவர்கள் தம்சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டும் சென்று இருப்பதற்குபுனர் வாழ்வுநிவாரணப் பணமாக 2500 ரூபா திருமலையில் வைத்து அரசினல் வழங்கப்படவிருப்பதாகவும் இதற்கான கடிதங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள திருமலை மாவட்ட அகதிகள் யாழ் அரசாங்க செயலகத்தில் பெற்றுவருகிறார்கள்.

## மக்கள் கருத்து

### நிரந்தரத் தீர்வு வேண்டும்

29-7-87 ம் திகதி தங்கள் பத்திரிகையில் வந்த 'இந்தியாவே வருக' ஆசிரியர் தலையங்கம் கண்டு மிக்க வேதனை அடைந்தோம். கடந்த நான்கு ஆண்டு காலமாக நாம் அனுபவித்த வேதனைகள் எல்லாவற்றிற்கும் ஓர் அரை குறையான தீர்வுதான் முடிவா? இத்தனை ஆயிரம் இளம் உயிர்கள், கோடிக்கணக்கான பொருள்களின் அழிவும், பொருளாதார சீர்குலைவும், கல்வி, கலாசாரம் இன்னும் எத்தனையோ சொல்லவொண்ணுத் துயரங்களும் இந்தத் தீர்வைப் பெறுவதற்காகத் தானு?

சரி மக்கள் துன்பத்திற்கு ஒரு முடிவு வேண்டும் தான். ஆனால் இன்று கூறப்படுகிற தீர்வு என்ன? நிரந்தரமாக வடக்கு கிழக்கு இணைந்த தாயகம். இதற்காகத்தானே இத்தனை வருடமும் பேச்சுவார்த்தைகள் இழுபறிப்பட்டன; குழம்பிப்போயின. ஆனால் இன்றைய தீர்வில் இந்த இணைப்பு நிரந்தரமா? இல்லையே தவிர இந்த மாகாண சுயாட்சிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் என்ன என்பது ஒன்றுமே தெரியவில்லை. (இதற்கு முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகளில் அதிகாரங்களைப்பற்றி ஓரளவாவது கோடிட்டுக் காட்டினர்) அப்படியிருக்கப் போராளிகளின் ஆயுதங்களைப் பறிப்பதில் மட்டும் செலுத்தும் கவனத்தைப் பார்க்கையில் இது ஓர் சூழ்ச்சிதானே என எண்ணத் தோன்றும். ஆயுதப் படையினரின் முகாம்கள் முற்றுக அகற்றப்படாத நிலையில் இந்திய இராணுவமும் ஓரளவு காலம்தானே நிலைத்திருக்கும். எங்கள் போராளிகள் தங்கள் உயிரையே துச்சமாக மதித்துப் போராடிய எங்கள் செல்வங்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்? இதுவரைகாலமும் வாலாட்டிய இராணுவம் இனிமேலும் (இந்திய இராணுவம் சென்ற பின்பும்) சும்மா இருக்கும் என்பது என்ன நிச்சயம்?

ஜே ஆர். பதவியிலிருக்கும் வரைக்கும் இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி இலங்கையரசு நடக்கலாம் என்று நம்பினலும் பின்னர்வரும் அரசாங்கம் எல்லாம் இந்த ஒப்பந்தப்படிதான் நடக்குமா? சிறிமாவோவோ, பிரேமதாசாவோ ஜனுதிபதியானல் இதனைக் கிழித்தெறிந்துவிடமாட்டார்களா? அப்படி நடக்குமானல் எங்கள் நிலை என்ன? நாம் என்ன செய்வது? மறுபடியும் போராட்டம் தொடங்கு

(5ம் பக்கம் பார்க்க)

## முருகனுக்கு கொடியேற்றம் பஞ்சமித் திதியில்!?

அகில இலங்கையில் நியம நிஷ்டை தவறாது பூசைகள் நடைபெறும் சிறப்புறு ஆலயங்களில் பூலோக சுவர்க்கம் எனக் காட்சிதரும் நல்லூர்க் கந்தசாமி ஆலயம் குறிப்பிடத்தக்கது

கடந்த வருடம் ஷஷ்டித் திதியில் நடைபெற வேண்டிய கொடியேற்று வைபவம், கவலையீனம் காரணமாக பஞ்சமித் திதியில் நடந்தேறி பின்னல் நிகழும் துர்ச்சம்பவங்களை முன்னுரைக்கும் அசுப சகுனமாயிற்று.

இதனை அகில இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம் உரியவர்களுக்கு நேரடியாகச்சுட்டிக் காட்டியவிடத்து இத்தகைய தவறுகள் இனியும் நடக்காமலிருக்க தாம் ஆவன செய்வதாக அறிவித்தனர்.

மீண்டும் இம்முறையும் பஞ்சமித் திதியிலேயே கொடியேற்றம் நிகழ்ந்துள்ளமை கவலைக்குரியது. 'வேதத்தின் நேத்திரம் சோதிடம்' ஆதலின் வேதவிற்பன்னர்கள் சோதிடத்தினை நழுவவிட்டு மேற்படி தவறுக்கு இடமளித்தது எவ்வகையிற் பொருந்தும்?

சி இரத்தினவடிவேல்
அளவெட்டி.

## தொழிற் கல்வி

இன்று தொழிற்கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று. கலாசாரப் பயிற்சியின் அடிப்படையிலேதான் தொழிற் கல்வி அமைய வேண்டும். தொழில் வல்லுநர் நாட்டுக்குக் கண்ணின் மணிபோன்றவர்கள்.

— க. சி. தங்கராசா

## தடுப்பு முகாமிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப்புலிகள் ஆயுத ஒப் படைப்புக்கு இணங்கி நேற்று முன்தினம் முதல் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கியதை அடுத்து எண்ணூறு போராளி களை விடுதலை செய்வதற்கான உத்தரவு ஏற்கனவே அறிவிக் கப்பட்டதாகவும் அவர் கூறி னார். [எ]

## கண்ணிவெடிகளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் கண்ணிவெடி இருக்கின் றதா என்று சோதித்துப்பார்க் கும்படி வேண்டுகோள விடுத் தால் தாம் ஆவன செய்வதாக தளபதி உறுதியளித்தார்.

இலங்கை இராணுவம் நிலை கொண்டிருந்த பாதைகளின் ஓரத்தில் நடக்காமல் தார் போட்ட வீதிகளில் நடக்கவும். வாகனங்களை அப் பாதைக ளால் செலுத்திச்செல்பவர்கள் மக்களைஓரத்திற்குத் தள்ளா மல் இருக்கும்படி கேட்கப்பட் டுள்ளனர்.

## நிரந்தரத்தீர்வு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வதா? யாரிடம் சென்று ஆயு தம் கேட்பது?

எனவே எமக்கு ஒரு தீர்வு தேவைதான். ஆனால் ஒரு நிரந் தரமான தீர்வாக இருக்க வேண்டும். நாம் சிந்திய செந் நீருக்கும், கண்ணீருக்கும் ஈடான தீர்வாக இருக்கவேண் டும். கிடைக்கும் மாகாண சுயாட்சி சிறீலங்காவின் ஜனா திபதி நினைத்தவுடன் கலைக் கக்கூடியதாகவோ, தாம் நினைத்தவர்களை ஆட்சிக்கு நிய மிக்கக்கூடியதாகவோ இருக் கக்கூடாது. அது நிரந்தரமான தாக இருக்கவேண்டும். இன் றைய காலகட்டம் மிக மிக ஜாக்கிரதையாக தமிழ் மக்கள் இருக்கவேண்டிய நேரம் எனவே ஆணித்தரமாக மக்க ளுக்கு அறிவுரை வழங்கவேண் டிய நீங்களே இப்படி மௌன மாக இருந்தால் யார் கூறு வது? இதுவரை காலமும் ஆணித்தரமான கருத்துக்களை யும், நீதிவழுவாமல் நடுநிலை மையாக நின்று மக்களுக்குப் பணிபுரிந்த ஈழநாடு தொடர் ந்து மக்களுக்கு அதேவழி யிலேயே நின்று பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல தீர்வை வரவேற்கலாம். ஆனால் அரை குறையான தீர்வை வரவேற்க லாமா? மக்களுக்கு இதை உணர்த்தவேண்டிய கடமை உங்களுக்கு இல்லையா? இதை யாரிடம் சென்று முறையிடு வது?

—க. செல்வமணி,

வட்டுக்கோட்டை.


## காணவில்லை

நெடுந்தீவு 1ம் வட்டா ரத்தைத் சேர்ந்த கனக ராசா (அருமை) தனது மகன், குருநாதன் (இந்தி ரன்) என்பவரைக் காண வில்லை என அறிவிக்கின் றார். குருநாதன் 5-8-87ல் நெடுந்தீவில் இருந்து லோஞ்சில் ஏறியவர், எங்கு இறங்கினாரோ தெரியவில்லை, இவரைக் கண்டவர்கள கீழ்க ணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

S. P. குருசாமி
No 204
மானிப்பாய் வீதி
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

அருமை
1ம் வட்டாரம்
நெடுந்தீவு மேற்கு
நெடுந்தீவு.

(சி 0218


## 9ல் ஹர்த்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 4ம்திகதி அன்று பிற் பகல் எமது தோழர் தேவதாஸ் [மன்னார்பிரதேச படைத்துறை ஆணையாளர்] தோழர் செந் தில்குகன் ஆகியோர் நிராயுத பாணியாக பூநகரி வழியாகச் சென்று கொண்டிருந்த வேளை யில் மறைந்து நின்ற பூநகரி 4ம் கட்டை ஸ்ரீலங்கா இராணு வத்தால் வழி மறிக்கப்பட்டு வாளால் வெட்டப்பட்டு ஜீப் பில் கட்டி இழுத்துச் செல்லப் பட்டனர். பின்பு இவர்கள் கொல்லப்பட்டதாகவும் இருவ ரது உடல்களையும் முகாம் வழி யாகச் சென்றவர்களது பார் வைக்குவிட்டுள்ளதாகவும் அறி யப்பட்டுள்ளது.

"இவ்விபரம் தொடர்பாக இலங்கை வந்துள்ள இந்திய சமாதானப் படை உயர் அதி காரியிடம் விபரிக்கப்பட்டது இவர்மூலம் ஸ்ரீலங்கா ராணு வத்தினரிடம் விசாரித்தபோது 'இவ்விதமாக ஒரு அசம்பாவித முும் நிகழவில்லை' என மறுத்து விட்டனர். திரை மறைவுக் கொலைகளை மறைக்கும் வல் லமை கொண்ட ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் கபடத் தன்மை உலகமறியாத விடய மில்லை.

இச்சம்பவத்திலிருந்து அமைதி நிலைமையைக் குலைக் கும் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசு இறங்கி விட்டமை தெளிவாகிறது இச்சம்பவங்கள் தொடரப் படாமல் இருக்கும் வகையிலும் சித்திரவதை செய்யப்பட்ட இருவர் நிலை குறித்து ஸ்ரீலங் காப் படையினர் தீர்க்கமான முடிவினைத் தெரிவிக்க நிர்ப்பந் திக்கும் வகையிலும் எதிர் வரும் 09ம் திகதி ஞாயிறன்று பூரண கர்த்தாலை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அனுஷ்டிக்குமாறு மக்களை ஈழப்புரட்சி அமைப்பு பணி வுடன் கேட்டுக்கொள்கிறது."

## குமாரணதுங்கா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைவர் விஜய குமாரண துங்காவும் இது குறித்து விடு தலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த யாழ்ப்பா ணம் வரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிலதினங் கள் தங்கிநிற்கும் திரு. விஜய குமாரணதுங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்ட இடங்களையும், சேதம டைந்த கட்டிடங்களையும் பார்வையிடுவார். (ஓ-மா)

## மாகாணசபைத்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை, இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது குறித்து இலங்கை-இந்திய ஒப் பந்தத்தில் திட்டவட்டமாக எதுவும் வரையறுக்கப்பட வில்லையாயினும் இதுவும் ஒப் பந்தத்தில் ஒரு பகுதியென அதிகாரபூர்வ வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. [எ]

## ஆடிவேல் விழா

(கொழும்பு)

ஜிந்துப்பிட்டி சிவசுப்பிர மணிய ஆலய ஆடிவேல் விழா இன்று காலை 10மணிக்கு நடை பெறவுள்ளது. (ஓ)

## பருவகாலச் சீட்டு விநியோகம்

(யாழ்ப்பாணம்]

1987 ஆவணி மாத பருவ காலச்சீட்டு விற்பனை கடந்த மாதத்தில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணங்களுக்காகவும் இதர காரணங்களுக்காகவும் 10-08-87ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று வடபிராந்திய போக்கு வரத்து சபை யாழ். சாலை முகாமையாளர் திரு வி.எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள் ளார்.


## நினைவஞ்சலி

### (அந்தியேட்டி அழைப்பிதழ்)

31-ம் நாள் (09-8-1987) 38-ம் நாள்



திரு.
ச. கெஜனனமூர்த்தி
(இளைப்பாறிய தபாலதிபர்)
தோற்றம்: 19-09-1928
மறைவு; 11-07-87



கே. சயந்தன்
(ஹரன்)
தாயின்மடியில்:22-03-1969
தாயக மீட்பில்: 04-07-1987
(நேரடிமோதல் நெல்லியடி)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும், மருதானை இளைப்பாறிய தபாலதிபருமாகிய திரு. ச. கெஜனனமூர்த்தி அவர்கள் 11-07-87 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் 31ம் நாள் நினைவஞ் சலி 'சக்தி இல்லம்'' வீரபத்திரகோவிலடி கோப்பாய் தெற்கில் 09-08-87 அன்று காலை நடைபெறும்.

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்
திகழ்ந்த எங்கள் குடும்பத்
தலைவனின் ஆத்மா சாந்தி
அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
அன்பின்: மனைவி, மக்
கள், மருமகன், மைத்
துனர், சகோதரிகள்,
மாமி.

நீசரின் கைப்பிடியில்
உன் நிஜவாழ்வு
முடிந்தாலும்
உன் நினைவுகள் நிழலாக
மறைந்தாலும் மனதளவில்
உம்மைநாம்மறந்ததில்லை.
எந்நாளும் மாய்கின்றோம்.
அன்பின்: அம்மா, சகோ
தரர். மைத்துனர், அம்
மாச்சி, பெரிய ஐயா, பெரி
யம்மா, மாமா, மாமி.

உற்றார், உறவினர்.

மே/பா எஸ். துரைரத்தினம்,
''சக்தி இல்லம்'',
கோப்பாய் தெற்கு, கோப்பாய்,

அ. மி. பாடசாலை
ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(சி 0214)


# சமாதான ஒப்பந்த விபரம்

[புதுடில்லி]

இலங்கையின் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணவும், இலங்கை-இந்திய உறவுகளைச் சீர்ப்படுத்தவும் இலங்கை ஜனாதி பதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியும் கடந்த மாதம் 29-ம் திகதி கொழும்பில் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது தெரிந்ததே.

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ளும் இந்த உடன்படிக்கையின்படி தமிழ் மொழியை உத்தியோகபூர்வ மொழியாக இலங்கை ஏற் றுக்கொள்ளவேண்டும்.

அதேவேளை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை விளைவிக்கும் எந்த நடவடிக்கையிலும் இலங்கை ஈடுபடக் கூடாது எனவும் இந்த உடன்படிக்கை வலியுறுத்துகின்றது.

சர்வதேச முக்கியத்துவம்பெற்றுவிட்ட மேற்படி உடன் படிக்கையின் விபரங்கள் வருமாறு:-

இலங்கை ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் ஜூலை மாதம் 29 ம் திகதி கொழும்பில் கூடி இலங்கை-இந்திய நாடு களுக்கிடையிலான பாரம்பரிய நட்புறவை தீவிரப்படுத்தவும், உறுதிப்படுத்தவும், இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்க்க வும், இனப்பிரச்னையைத் தொடர்ந்து எழுந்துள்ள வன்செயல் களைத் தீர்க்கவும், இலங்கையிலுள்ள சகல இன மக்களிடையே யும் நட்புறவை வளர்க்கவும், அவர்களின்நலன்களை மேம்படுத் தவும் உள்ள அவசியத்தை உணர்ந்து பின்வரும் குறிக்கோள் களை நிறைவேற்றுமுகமாக இந்த உடன்படிக்கையை எட்டி யுள்ளனர்.

1. 1 இலங்கையின் ஐக்கியம், சுதந்திரம், பிராந்திய ஒரு மைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கவேண்டும்.

1. 2 இலங்கை, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங் கியர் ஆகியோரைக் கொண்ட ஒரு பல்-இன, பல்-மொழி நாடாகுமென்பதை ஏற்றுக்கொள்ளல்.

1. 3 ஒவ்வொரு இனமும், தனக்கென ஒரு தனித்துவ மான மொழி, கலாசாரத்தைக் கொண்டுள்ளதென்பதை ஏற் றுக்கொள்ளல். அத்துடன் அவை வளர்க்கப்பட வேண்டும் என்பதனையும் ஏற்றுக்கொள்ளல்

1. 4, வடக்கு கிழக்கு மாகாணங்கள் சரித்திரகாலம் தொட்டு இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் குடியிருப்பாக இருந்துவந்துள்ளது என்பதுடன் அவர்கள் எப்போதும் இங்கு ஒன்றுக ஏனைய இனத்தவருடன் இப்பிராந்தியத்தில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அங்கீகரித்தல்.

1. 5 இலங்கையின் ஐக்கியம், பிராந்திய ஒருமைப்பாடு, சுதந்திரம் ஆகியவை தொடர்பான காரணிகளை ஊக்குவிக்க வேண்டும. இலங்கை ஒரு பல்-இன, பல்-மொழி, பல்-மத நாடு என்ற இயல்பைப் பாதுகாக்கவேண்டும். இந்தநாட்டில் சகல பிரஜைகளும் சமஉரிமையுடன், பாதுகாப்புடன், நட்புற வுடன் வாழவேண்டும் என்பதனை உணருதல்.

(நாளை தொடரும்)

## இராணுவ நடவடிக்கையால் சேதமாகிய பூநகரி ப.நோ.கூ. சங்கத்திற்கு உடனடி நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் நட வடிக்கைகளினால் பூநகரி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஏற் பட்ட பொருள் இழப்பிற்கு உடனடி நிவாரணமாக 4 லட்ச ரூபாவை வழங்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் உத்தரவிட் டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து பூநகரி ப. நோ. கூ. சங்கத்திற்கு 13 லட்ச ரூபா விற்கு மேல் இழப்பு ஏற்பட் டுள்ளது. சங்கக் கட்டிடங் களுக்கு எட்டு லட்ச ரூபாவும் பொருள்களுக்கு 5 லட்ச ரூபா வும் இழப்பு ஏற்பட்டுள்ளதென சங்கத் தலைவர் திரு. தி. இராச நாயகம் கிளிநொச்சி அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப் பித்துள்ளார்.

பொருள் இழப்பு ஐந்து லட்ச ரூபாவில் 4 லட்ச ரூபா உடன் கடன் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளதாகவும், மிகுதி ஒரு லட்ச ரூபாவும் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி யின் அறிக்கை கிடைத்த பின் வழங்குவதாகவும் அரச அதி பர் உறுதியளித்ததுடன் கட்டிட இழப்பிற்கு நட்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுப் பதாகவும் கூறியுள்ளார்.

பூநகரி ப நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தி. இராச நாயகம், பிரசைகள் குழுத் தலைவர் திரு பொ தங்கராசா கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தேவசிகாமணி மேலதிக அரசாங்க அதிபர் திரு எம். அமிர்தலிங்கம் ஆகியோர் சகல சேதங்களையும் பார்வையிட்ட னர். (வா)

## நெடுந்தீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி துப்பாக்கிப் பிரயோ கம் செய்தனர். தெய்வாதீன மாக துப்பாக்கிச்சூடு எங்களைத் தாக்கவில்லை எங்களின் படகை அண்மித்த கடற்படை யினர் படகினுள் ஏறி மூவரை யும் துப்பாக்கிகளால் கடுமை யாகத்தாக்கி விட்டு நயினாதீவு முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கும் தாக்கிவிட்டு "பிரபாகரனின் கூட்டத்துக்குப்போனீர்களா?' புலிகள் ஆயுதங்களை ஏன் கொடுக்கவில்லை' என்றெல் லாம் கேட்டு மீண்டும் தாக்கி னார்கள். பின்னர் திசையறி கருவியையும், மணிக்கூட்டை யும் பறித்துவிட்டு எச்சரித் தார்கள். எங்களுக்கு நேர்ந்த கதி பற்றி இந்திய அமைதிப் படைக்கு முறையிட்டு பறித் தெடுத்த விலையுயர்ந்த பொருள்களை பெற்றுத்தரு மாறு கேட்கப்போகிறோம்'' என்று அந்த மூன்று ஏழை கடற்றொழிலாளர்களும் கண் ணீர்மல்க சொன்னார்கள். (மா)

## நாட்டின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மக்களின் அங்கீ காரமில்லாமலேயே ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியாவுடன் சமரசத்திட்டமொன்றை செய் திருப்பது நாட்டைப் பிளவு படுத்துவதன் முதற்கட்டமே என்று கூறிய அவர்; ஆப்கா னிஸ்தானில் சோவியத் ராணு வம் பல ஆண்டுகளாக நிலை கொண்டுள்ளது என்று சுட்டிக் காட்டியதுடன் இந்திய இரா ணுவம் இலங்கையிலிருந்து வெளியேறுவது எப்போது என்றும் கேள்வி எழுப்பினார். [எ]

## காலொன்று போனாலும்...

அரசபணி ஒருபுறமும், அழிகின்ற தமிழர்காய்
இரவுபகல் பாராமல் இயற்றிய
தொண்டொருபுறமும்,
சிரசேற்றித் தமிழ்த்தாய்க்குச் செய்தபணி
ஒருபுறமும்,
மறக்காது தமிழரினம், மாண்புடனே
உனைவாழ்த்தும்!

எந்நாளும் எமக்காக எப்போதும் ஓடியநீ,
புண்ணாகிக் காலிழந்து போயினையோ! தருமது
மண்ணாகிப் போனதுவோ! மாண்டானோ
அவ்விறைவன்!
கண்ணூறாய் அழுதாலும் கவலையது தீராதே!

காலொன்று போனாலும், கடமைகளை நீ செய்யும்
நாளொன்று மீண்டும்வரும் நல்லவர்கள்
வேண்டுதலால்
வேல்வந்து வினைதீர்க்கும்! வெற்றிகளும்
உனைச்சேரும்!
ஆல்போல உனைத்தாங்க ஆயிரமாய் விழுதுவரும்!

**இ. ஜெயராஜ்**

(மக்களுக்காய் தொண்டாற்றச் சென்றவேளையில் கண்ணிவெடி விபத்தில் சிக்கி காலொன்றை இழந்த உதவி அரச அதிபரும், கவிஞருமான திரு. ச. பொ. பாலசிங்கம் அவர்கள் விரைவில் நலம் பெறக் கம்பன் கழகத்தினர் பிரார்த்திக்கின்றார்கள்.)

# வடமராட்சியில் ஒரு ‘சந்திரமண்டல சஞ்சாரம்’

**ரி. சிவகணேசன்**

வடமராட்சிப் பகுதியில் ரம்மியமான கடற்கரைச் சூழலில் குதூகலித்து நின்றஅந்த வல்வெட்டித்துறைக் கிராமம் இன்று பூகம்பப் பிரதேசமாக எங்கும் அழிவின் சின்னங்களுடன் காட்சிதருகின்றது. வடமராட்சி தாக்குதலின் முன்பே அப்பகுதியிலிருந்து பெருந்தொகை மக்கள் வெளியேறிவிட்டதால் இத்தாக்குதலின் பின்னர் மனித நடமாட்டம் அற்ற சூனியப்பிரதேசமாகவே இது மாற்றப்பட்டுள்ளது. தற்போது ஆங்காங்கே சில நேரத்தில் சிலமனிதர்களை மட்டுமே காணமுடிகிறது.

வடமராட்சி யுத்தப் பூமியாக மாற்றப்பட்டு அங்கு யுத்தசூழ்நிலைஉருவாகி இந்திய இலங்கை தலைவர்கள் சமாதான உடன்படிக்கையொன்றை உருவாக்கி இப்பகுதிக்கு இந்திய இராணுவம் வந்தபின்பே இங்கு மாடுகள் கூட நடமாட ஆரம்பித்துள்ளன. இப்பகுதிமக்களேசெல்ல முடியாதிருந்த பலபகுதிக்கும் இந்திய இராணுவம் வந்ததினால் பத்திரிகையாளர்களும் இலங்கை இராணுவம் நிலைகொண்டிருந்த முகாம்வரை சென்றுதிரும்பக்கூடியதாயிருக்கிறது.

**எச்சரிக்கை**

வல்வெட்டித்துறைக்குள் நுழைந்ததுமே இந்திய இலங்கை இராணுவமும் மக்களும் எம்மை கவனமாகநடக்குமாறு எச்சரித்தனர். மண்குவியல் இருந்தால்மிதிக்க வேண்டாம்.

கற்குவியல்களின் கீழே கண்ணிவெடி கவனம்; வீதியின் கரைக்கு செல்லாதீர், இவையெல்லாம் அவர்கள் எமக்கு கூறிய எச்சரிக்கைகள்.

நடக்கத் தொடங்கினோம். சந்திரமண்டலத்தில் சஞ்சாரம் செய்வதுபோல் கால்களை எட்டிவைத்து மிகமெதுவாக ஒவ்வொருஅடியையும் எடுத்து வைத்தோம். ஓரிடத்தில் மட்டுமல்ல. எமது வடமராட்சிப் பயணத்தின்போது இராணுவ வாகனச் சக்கரங்கள் சூழன்றுசென்ற அனைத்துஇடங்களிலும் நாம்சந்திர மண்டல சஞ்சாரத்தையே மேற்கொண்டோம்.

மக்கள் சேவை மகேசன் சேவை என்று சென்ற யாழ் செயலக உதவிஅரசாங்க அதிபர் திரு. பாலசிங்கம் அவர்களும் சமூகசேவைப் பணிப்பாளர். திருமதி கமலாதேவி சிவசிதம்பரமும் பொறிவெடியில் சிக்கி துர்ப்பாக்கிய நிலைக்குள்ளான சம்பவம் எம்கண்முன் நிழலாடியது.

வல்வெட்டித்துறைக்குள் காலடி எடுத்துவைத்தபோது எம்மை வரவேற்பதற்கு மக்கள் எவருமில்லை. ஏனெனில் அவர்கள் குடியிருக்க வீடுகளே இல்லை, மலைபோன்ற கற்குவியல்களில் ஏறி இறங்கினோம். இவை அழிவால் ஏற்பட்ட அவலங்கள்.

வல்வெட்டித்துறை நகருக்குள் எங்கும் கற்குவியல்கள், அழிந்த கடைகள், இடிந்த வீடுகள், வீடுகள்அழிந்ததினால் வீதிகள் கூட இடிபாடுகளால் மூடப்பட்டு மறைக்கப்பட்டிருந்தன. வல்வெட்டித்துறை கீரிமலை வீதியில் சுமார் நூறு வீடுகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டும், புல்டோசர்களினால் இடிக்கப்பட்டுமிருந்தன.

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர்களின் சொந்தப்பூமி வல்வெட்டித்துறையானதால் இங்கு அழிவின் அகோரம் அதிகமாயிருந்தது


யாழ் பல்கலைக்கழக தமிழ்த்த்றைப் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வீடும் மற்றும் அவரைச்சார்ந்தவர்களின் வீடுகளும்கூட தரைமட்டமாகியிருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனின் வீடு இப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்ட சொற்பநாட்களிலேயே சேதமாக்கப்பட்டது என மக்கள் கூறினர்.

அவ்வீடிருந்த இடத்துக்குக் குச் சென்றோம். அழிந்தநிலையிலும் அதன் சுவர், தூண், கூரை என்ற அத்தியாவசிய பகுதிகள் உறுதியாகத் தானிருந்தன. ‘‘ஈஸ்வரி வாசா’’ என்ற அதன்பெயர் அழிந்துவிடவில்லை.

நாம் திரு. பிரபாகரனின் வீட்டைத்தேடியபோது அங்கிருந்த சிறுவர்கள் எவரும் அதனை எமக்குகாட்டவில்லை.

நாம் தமிழ்பத்திரிகையாளர் என்றும் எமக்கு அதனை காட்டுமாறு வற்புறுத்திய பின்னரே தாய்மார்கள் சிலர் வீட்டை எமக்கு காட்டினர். அப்பகுதிசிறுவர்கள் தமதுதலைவர்மீதுவைத்திருந்தவிசுவாசம் அங்கு பிரதிபலித்திருந்தது. தலைவர் பிரபா இன்றும் தலைமறைவாகத்தான் வாழுகிறாரென அந்தச் சிறுசுகள் நினைத்திருக்கலாம்.



அழிவின் மத்தியிலும் உறுதி குலையாத பிரபாவின் ‘ஈஸ்வரி வாசா’ (படம்: செந்தில்)

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலென்றால் வடபகுதியில் தெரியாதவர் எவருமில்லையெனலாம். இந்திய இலங்கை கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறுவதே இங்குதான். திருவிழாக் காலங்களில் வல்வெட்டித்துறைக் கிராமமே திரண்டு இக்கோயிலில் இருப்பது வழமை. ஆனால் இன்றோ கோயிலுள்ள அந்த ஊரில் குடியிருக்க மக்களே இல்லை.

மகிடாசூரனை அழித்த அம்மன் இந்த மனித சூரர்களினால் வல்லை நகர் அழிந்தபோது எதுவுமேசெய்யமுடியாதிருந்தது. காப்பாற்று, காப்பாற்று என உயிர் துறந்த மக்களையும் வீடிழந்து வாசலிழந்து இன்று வாழவிழந்து போன மக்களின் நலம் அம்மனையே அடியோடு மாற்றிவிட்டதோ கோயிலின் சுற்றுப்புறமெங்கும் அழிந்த வீடுகளே. அருகில் இருப்பது இராணுவ முகாமே.

இந்த இலங்கை இராணுவ முகாம் இந்தியத் துருபபுக்களின் வருகையையடுத்துத் தனது மூடுவிழாவை எதிர்பார்த்தபடி இருக்கிறது.

### மூவர் பார்வையில் முதல் கட்டம்

வவ்வெட்டித்துறைக்கு ஏற்பட்ட சேதம் பற்றி அடிக்கடி செய்திகள் கிடைக்கும். ஆனால் நேரில் சென்றபோது அப்பகுதியின் நிலை எவ்வாறானதென்பதை உணர்ந்தோம்.

இந்த அழிவுகளையும் தாங்கி மக்கள் இன்றும் அங்கு நடமாடுகிறார்கள் என்றால் அவர்கள் எதையோ நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையே அவர்களை அப்படி அங்கு நடமாடவைக்கிறதென்பதை உணர்ந்தோம்.

சுமார் 300 வீடுகள் வரை இப்பகுதியில் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. வீடுகளின் கூரை தரைக்கு இறங்குமளவிற்கு இராணுவத்தினர் இவற்றைத் தகர்த்துள்ளனர். மதில்கள் யாவும் தகர்க்கப்பட்டும் வீடுகள் அழிக்கப்பட்டதனால் கிடைத்த பெருமளவு கற்களையும் தம் முகாமின பாதுகாப்பிற்கு இராணுவத்

(7ம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்தினர்---- வீடுகளை தகர்ப்பது அச்சுவேலியில் நீடிக்கிறது

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலிப் பகுதிகளிலும் இலங்கை இராணுவத்தினர் தற்போதும் வீடுகளை உடைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத்தினர் வீட்டுக் கதவுகளை உடைத்துவிட்டு அங்கு இணைப்புச் செய்திருந்த மின்சார உபகரணங்களை எடுத்துச் சென்றனராம்.

இவர்கள் ஆயுதபாணிகளாக இல்லாமல் சிவில் உடுப்புக்களுடன் கையில் இரும்புக்கம்பிகளுடன்திரிந்தே இவ்வாறு வீடுகளை உடைத்து வருகிறார்களாம்

‘‘இப்போ நாம எல்லோரும் சமாதானம் தானே இனமேல் நீங்கள் சந்தோஷமாக இருக்கலாம்’’ என்று கூறிக்கொண்டே வீடுகளை உடைத்து இப்பொருள்களை எடுக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [வா]

## கொழும்பு வன்செயல்கள்: பிரபல வர்த்தகர் உட்பட 125 ஜே. வி. பியினர் கைது!

(கொழும்பு)

கொழும்பில் இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து இடம்பெற்ற வன்செயல்கள தொடர்பாக கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் உட்பட 120 ஜே வி. பி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சி ஐ டி பொலிஸாரின் புலன் விசாரணைகளுக்குள்ளாகியுள்ளனர்.

இக்கலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற ஆயுத உரிமையாளர்களிடம் இருந்து ஆயுதங்களைப்பெற்று கலகங்களில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கபட்டது.

தெற்கில் கலகம் இடம்பெற்ற அனைத்துப் பகுதிகளிலும் தாக்குதல்களுக்குள்ளான பொலிஸ் நிலையங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான காடையர்கள் கைதாகியுள்ளனர். மேலும் பலரைத் தேடி வலைவிரிக்கப் பட்டுள்ளது.

## இருபாலை நலன்காக்கும் பிரிவு

(யாழ்ப்பாணம்)

தம்பாலை, வளளாய், பத்தமேனி பகுதி மக்கள் அண்மைக் கால சம்பவங்களினால் இடம்பெயர்ந்த சுமார் 180 பேர் இருபாலை நலன் காக்கும் பிரிவினர் மேற்பார்வையில் இருந்து வந்தனர். இவர்கள் பலரும் படிப்படியாக தமது சொந்த இடங்களுக்கு செல்கின்றார்கள். இவர்களில் பாரிய பாதிப்பை பெற்றவர்கள் குறிப்பாக வீடு முற்றாக சேதமாக்கப்பட்டவர்கள் வரும் 8ம் திகதி சனிக்கிழமை மதியத்துடன் தமது பழைய இடங்களுக்கு செல்ல உள்ளார்கள் இவர்களுக்கு தலா 250/- வீதம் நிவாரண உதவியாக வழங்க இவ்வூர் பிரமுகர்கள் முன்வந்துள்ளார்கள்.

சனியன்று காலை 8-30 மணிக்கு இம் முகாம் பற்றிய பொதுக்கூட்டம் நடைபெறும்.

## கிளிநொச்சியில் புலிக்கொடி———— இராணுவ அதிகாரிகள் - புலிகள் சந்திப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் புலிக்கொடி ஏற்றப்பட்டன கரடிப்போக்கு, உருத்திரபுரம், இரணமடுச்சந்தி உட்பட பரவலாக பல கிராமங்களில் புலிக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி மாவட்ட இணைப்பதிகாரி கேர்ணல் குலதுங்கா நிராயுதபாணியாக பரந்தனில் உள்ளூர் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக அறியப்படுகிறது. இச்சந்திப்பில் கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினரும் கலந்து கொண்டதாக தகவல் தெரிவிக்கின்றது.

இதேவேளை கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு, கொக்காவில் முதலான இடங்களில் உள்ள இராணுவ முகாங்கள் இதுவரை அகற்றப்படவில்லை.

இந்த நான்கு இராணுவ முகாங்களிலும் வழமையான பணிகள் நடைபெற்று வருகின்றன ஆனையிறவு, கிளிநொச்சி, பரந்தன் முகாங்களில் பிரயாணிகள் மற்றும் வாகன சோதனைகள் வழமைபோல் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இணைப்பதிகாரி கேர்ணல் குலதுங்காவுக்கு புலிக்கொடி வழங்கப்பட்டதாகவும் மற்றும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

## வீதிதிருத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி - பருத்தித்துறை வீதி நெடுங்காலமாக மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அதைச்சீர் செய்வதற்கு சில வேலையாட்கள் றோலருடன்வந்து சுமார் 20 யார் தூரம்வரை வேலை செய்தனர் அதன் பின்னர் எவருமே அந்த வீதியைக் கவனிக்கவில்லை என்றும் உடன் இந்த வீதியைத்திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அச்சுவேலி மக்கள் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

மாகாணசபைத் திட்டம்:—

# பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எதிர்த்துப் போராடும்

## ராஜீவ் தாக்கப்பட்டதற்கும் சிறிமா கவலை தெரிவிக்கிறர்

(நமது நிருபர்)

உத்தேச மாகாணசபை சட்டத்தை எதிர்த்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத்தில் போராட்டம் நடத்தும்.

இவ்வாறு சுதந்திரகட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு றெஸ்மீட்பிளேஸில் உள்ள தமது இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

உத்தேச மாகாணசபைத் திட்டம் குறித்தும் அதனல் ஏற்படும் ஆபத்துக் குறித்தும் மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் நாடு முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளோம்.

### ராஜீவ் தாக்குதல் கவலைக்குரியது

பிரியாவிடை அணிவகுப்பின்போது இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தாக்கப்பட்டமை குறித்து நான்வெகுவாகக் கவலையடைந்துள்ளேன்.

அண்மையில் கொழும்பிலும் மற்றும் தென்பகுதியிலும் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களின்போது தமிழ் மக்களும் அவர்களது உடைமைகளும் தாக்கப்படவில்லை. அரசாங்கத்தின் சொத்துக்களே அழிக்கப்பட்டிருக்கின்றன சிங்கள மக்கள் தமிழ் மக்களை வெறுக்கவில்லை. அரசாங்கத்தின் செயலையே வெறுக்கிறர்கள் என்பதை இச்சம்பவங்கள் தெளிவாக்கியுள்ளன (கே)

# பாதிக்கப்பட்ட பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

(அலுவலக நிருபர்)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீண்டும் இயங்கவைப்பதற்கான துரித நடவடிக்கைகளை யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம்.எம் மன்சூர் மேற்கொண்டுள்ளார்

வலிகாமம் வடக்கு மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளே பெரும்பாலும் இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டுள்ளன

வடமராட்சிப் பகுதியில் உள்ள 83 பாடசாலைகளில் 24 பாடசாலைகள் சேதத்திற்குள்ளாகியும், 4 பாடசாலைகள் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலை. பெண்கள் பாடசாலை, நெல்லியடி மததிய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியவை தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளன

வடமராட்சிப் பகுதிகளில் மினி முகாம்களாகப் பாவிக்கப்பட்ட பாடசாலைகளில் கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தினல் அவற்றை அகற்றித்தருமாறு இராணுவ உயரதிகாரிகளிடம் கல்விபபணிப்பாளர் கேட்டுள்ளார் எனவும் தெரிகிறது.

மூன்றும் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது பெரும்பாலும் குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்தும் இயங்கலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

## 38 ஆண்டு சேவை நிறைவு

மெல்லிய உருவம். நெற்றியில் சந்தனப்பொட்டு. மூக்குக் கண்ணுடி. தலையில் கண்சிமிட்டும் நரைமயிர் என்பன இவரின் தோற்றமாகும். இவ்வாறு சில புத்தகங்களுடனும், கைப்பையுடனும் வண்ணை நாவலர் பாடசாலை வகுப்பறையில் காணப்படுபவர் தான் "இங்கிலீசு அக்கா" திருமதி வ. அரியரத்தினம் அவர்கள்.

இவரின் 38 ஆண்டு ஆசிரிய சேவை நிறைவையொட்டி சேவை நலம் பாராட்டு விழா கடந்த மாதம் 6-ம் திகதி யாழ் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றது இவ்வைபவத்தில் அதிபர், சக ஆசிரியர்கள் இவரின் சேவையைப் பாராட்டினர்கள்.

இவர் தனது 38 வருட ஆசிரிய சேவையை ஒரே படசாலையிலேயே மேற்கொண்ட பெருமையுடையவர். இவர் பாடசாலை உள் வேலைகளையும் புறவேலைகளையும் மனங்கோணது திறம்படச்செய்து முடிப்பதனுல் எல்லோரிடமும் நற்பெயரைத் தட்டிக்கொள்வார். இவர் சைவாசாரமும், கடவுள் பக்தியும் நிறைந்தவர். பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் ஆங்கிலப்போட்டிகளில் இப்பாடசாலை வெற்றி பெற மாணவர்களை ஊக்குவிப்பார். எல்லோருக்கு தாயாகவும், சகோதரியாகவும, சிறந்த ஆசானுகவும் விளங்கிய இவர், சகலருக்கும் புத்தி கூறுவதிலும் சமர்த்தராக விளங்கினர்.

இவரின் ஓய்வு பாடசாலைக்கும், கல்விச் சேவைக்கும் பெரும் இழப்பாகும்.

—சிவா.

நாவலர் பாடசாலை.

## "இரு அரசுகளின் ஒப்பந்தத்தினல்—

# நிரந்தர, இடைக்காலத் தீர்வைக் காண முடியாது"

### கம்யூ. கட்சி (இடது)

(யாழ்ப்பாணம்)

இரு அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தினுல் மட்டும் இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வையோ அன்றி இடைக்காலத்தீர்வையோ கண்டுவிட முடியாது'

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

'தமிழர் பிரச்சனையில் சம்மந்தப்பட்ட சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனும், சம்மதத்துடனும் ஒரு இடைக்காலத் தீர்வு காணப்பட முடியுமே தவிர ஒருதலைப்பட்சம் நிர்ப்பந்தம், அச்சுறுத்தல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி எந்தத் தீர்வும் திணிக்கப்படக்கூடாது

அனைத்து தீவிரவாத இளைஞர் இயக்கங்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும், இலங்கை அரசாங்கமும் கலந்து பேசி இணக்கமான ஒரு அரசியல் தீர்வு காணப்படுவதையே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வலியுறுத்துகின்றது

கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அமைதி காக்கும் படையை இங்கு வரவழைத்துள்ளமை இந்த நாட்டின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை என்பனவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்துவது மட்டுமன்றி தென்ஆசிய நாடுகள் அனைத்துக்குமே ஒருபுதியவகை அச்சுறுத்தல் ஏற்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. ஜெயவர்த்தன அரசாங்கம் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு அந்நிய நாட்டிடமும் தேசத்தின் இறமையையும், சுய கௌரவத்தையும், ஈடுவைத்து வந்துள்ளது. அதன்உச்சக்கட்ட நடவடிக்கையே இந்தியப் படைகளை அமைதி காக்கும் பெயரில் வரவழைத்துள்ளமையாகும். இந் நடவடிக்கையை எமதுகட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

எமது கட்சி ஏற்கனவே இனப்பிரச்னையின் இடைக்கால தீர்வுக்கான பிரேரணைகளை முன்வைத்து அரசியல் தீர்வின் அவசியத்தை வற்புறுத்தி வந்துள்ளது இன்று தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களினதும் விருப்பமும் அதுவேயாகும். ஆதலால் சகல தீவிரவாத இளைஞர் இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இலங்கை அரசாங்கமும் விரிவான பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதன் மூலம் ஏற்படும் இணக்கமான அரசியல் தீர்வே சரியாள இடைக்காலத் தீர்வாக அமைய முடியும். அதன் மூலமே உண்மையான சமாதானமும் ஏற்படமுடியும்.

## சேத விபரம் சேகரிப்பு

[மாவிட்டபுரம்]

கீரிமலைப் பகுதியில் ஏற்பட்டுள்ள சேதவிபரங்கள் குறித்து கீரிமலை பிரஜைகள் குழுவினர் மதிப்பீடுகளைத்தயாரித்து வருகின்றனர்.

கீரிமலை வலித்தூண்டல் பகுதியில கடற்றெழிலாளர்களின் 10க்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பல வீடுகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் சேதமடைந்கதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## பதிவாளர் பாதிப்பு

(மாவிட்டபுரம் நிருபர்)

யாழ் மாலட்டத்திலுள்ள பதிவாளர்களுக்கு கடந்த பல மாதங்களாக அலவன்ஸ் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

யாழ் மாவட்டத்திலுள்ள 65 பதிவாளர்களுக்கும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென்று கூறப்படுகிறது

கடந்த ஆண்டிலிருந்து இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் பதிவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# இப்படியும் நடக்கிறது

அம்பாள் பெருமைபற்றி நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

நமது பண்டத்தரிப்பு நிருபர் பின்வரும் தகவலைத் தெரிவிக்கிறர். படித்துப் பாருங்கள்.

இந்திய இராணுவம் காங்கேசன்துறைப் பகுதிக்கு வந்து பொறுப்பேற்றபின் ஏற்பட்ட அமைதி நிலையில் மாவிட்டபுரத்திலுள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்ற அகதியான ஒருவர் தமது இரண்டு லட்ச ரூபா பெறுமதியான வீடு குண்டு வைத்து தகர்க்கப்பட்டு அடையாளமே தெரியாதவாறு அழிக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

அவரது வீட்டுத் தளபாடங்கள்—சொத்துக்கள் யாவும் அந்த வீட்டுடன் சேர்த்து அழிக்கப்பட்டிருந்தன சற்றுநேரம் கண்கலங்கியவாறு அங்கே நின்று பார்த்துவிட்டு திரும்பிய அவருக்கு மற்றெரு ஆச்சரியம் காத்திருந்தது.

அவரது வீட்டின் பெரிய சுவாமி அறையில் வைக்கப்பட்டு அவரால் வணங்கிவரப்பட்ட முருகப்பெருமானின் பெரிய படமும், அம்மன், லட்சுமி பெரிய படங்களும் பாதுகாப்பாகக் கழற்றி அங்குள்ள பூவரசமரம் ஒன்றில் தொங்கவிடப்பட்டிருந்தன!

இராணுவத்தினர் வீட்டைக் குண்டுவைத்து தகர்ப்பதற்கு முன்னர் அந்த சுவாமிப்படங்களை மட்டும் கழற்றி எடுத்துவந்து வெளியிலுள்ள மரத்தில் கம்பியால் கட்டிக் கொழுவிவிட்டே வீட்டைக் குண்டு வைத்துத் தகர்த்திருக்கின்றனர்!

இராணுவத்தினருக்கும் என்னே பக்தி?

இந்தப் பக்திக்குத்தான் பெயர் **பயபக்தியா?**

ஊடுருவி

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 22, (7-8-87)
கிழமை: வெள்ளி
திதி: திரயோதசி
நட்சத்திரம்: பூராடம்

மேடம்: தொழில் சிறப்பு. டாக்டர்கள் போற்றப்படுவர். சிலர் சுபகருமம் இடம்பெற ஆலோசிப்பர்.

இடம்: குடும்பப் பிணி தலைதூக்கும். அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டி வைக்கும். குறுக்கு வழிகளை நாடவேண்டாம்.

மிதுனம்: திரவிய லாபமுண்டு வெளியிடத்தொடர்புகள் பெருகும். களத்திரப் பேச்சும் இடம்பெறலாம்.

கடகம்: சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழில் கஷ்டமுண்டு. புதிய முதலீடுகளை இன்று தவிர்க்கவும்.

சிங்கம்: இறைவழிபாடு மேலிடும். குடும்பத்திலும் இனிமை தவழும். தந்தை வழி ஆதரவும் பலமடையும்.

கன்னி: இடைக்காலப் பிரிவும் தோன்றலாம். தேடிய உறவு நாடியே வரும். தேனன வாழ்வும் உண்டாம்.

துலாம்: சகோதர சந்தோசம் காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும். செய்தியொன்று கிட்டும். வெளியிடத்துப் பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: காலதாமதத்தால் பொருட்செலவு ஏற்படும். ஆணவப்போக்கு மற்றவர்களைப் பகைக்கவைக்கும்.

தனுசு: பகைமூட்டம் வட்டமிடும். தொழிலும் முட்டுக்கட்டை தென்படும். கிடசித்தம் இருப்பின் எதைவும் சமாளிக்கலாம்.

மகரம்: இளம் பருவத்தினருக்கு இன்பப்பூங்கா. அறவழிகளை மனம் நாடும் மாணவர்களுக்கு மகத்தானதினம்.

கும்பம்; உறவுமுறையில் வெடிப்புகள் தோன்றும உற்சாகம் குன்றும். வீண்பழிக்கும் இன்று ஆளாக நேரிடும்.

மீனம்: தெளிந்த மனம். அமைதியான வாழ்வுமுண்டாம். அன்னியர் உறவும் உண்டாம்.

வே. ரவீந்திரன்

## வடமராட்சியில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தினர் பயன்படுத்துகிறர்கள்.

நகரின் மையத்தில் பல கடைகள் இருந்ததாக மக்கள் கூறியே அறிந்துகொண்டோம். அந்தளவிற்குக் கடைகள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டன.

வடமராட்சித் தாக்குதல் ஆரம்பமாகியதும் மக்கள் தமது உடமைகள் சகலவற்றையும் வீடுகளில் வீட்டு உயிர்ப் பாதுகாப்பிற்காகக் கால்போன போக்கில் ஓடினர்கள்.

அழிப்பு, உடைப்பு, தகர்ப்பு முடிவடைந்ததும் இப்பகுதிகளுக்கு வந்தவர்கள் தமது வீடுகளையே காணவில்லையென்றல் பெறுமதிவாய்ந்த பொருள்களின் நிலைபற்றி என்ன கூறலாம்?

செல்வச்செழிப்பால் உயர்ந்து நின்ற வல்வெட்டித்துறைக் கிராமம் இன்று பூகம்பப் பிரதேசமாகக்காட்சியளிப்பதைப் பார்த்த இந்திய இராணுவத்தினர் பலரும் கலங்கிப்போனதை அவர்களுடன் கதைத்தபோது தெரிந்துகொண்டோம்.

ஆண்டவன் இருந்தும், கோயில்கள் இருந்தும் எம்மை ஆள்பவன் கொடுமையால் இந்நிலைக்குத் தள்ளப்பட்ட எமக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புகளைவிட உயிரிழப்புகளே அதிகம் என்றர் மகனை இழந்த தந்தை.

மக்கள் பலரும் வெளியேறிவிட்டனர் என்றே ஒரு நாள் அவர்கள் இங்கு மீளவும் வருவார்கள் அன்று அவர்கள் வீடுகளை கட்டலாம். வீதிகளைத் திருத்தலாம். விழாக்கோலம் பூணலாம். ஆனல் எம்முடனிருந்து உறவாடிய பலரும் இனி எப்போது வருவார்களென்றே கலங்குகிறர்கள் இப்பகுதி மக்கள் (தொடரும்)

## தகவல் தாருங்கள்

5-6-1987 முதல் என் மனைவி திருமதி செல்லன் இலச்சுமி (வயது 35) என் பிள்ளைகள் சுபத்திரா [வயது 12], சித்திரா (வயது 8) இருக்கும் இடம் தெரியவில்லை. இவர்களைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு அறியத்தரவும்.

நா. செல்லன்
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 7-8-87

## வவனியாவில் இந்திய இராணுவத்தினர்
# ஓமந்தை ராணுவ முகாமில் புலிக்கொடி!

((கே. கேசவநம்பி)

அமைதி காக்கும் இந்தியப் படையினர் நேற்றுமுன்தினம் வவனியா வந்து சேர்ந்தனர்.

இவர்கள் திருகோணமலையிலிருந்து 'ட்ரக்' வண்டிகளிலும், தாங்கிகளிலும், கனரக வாகனங்களிலும் வந்துசேர்ந்தனர்.

புலிக்கொடி பறக்கவிடப்பட்ட ஜீப் வண்டியொன்றில் இந்திய ராணுவ அதிகாரிகள் முன்னேர 600 இந்திய ராணுவஅணி வந்துசேர்ந்தது.

இந்திய அமைதி காக்கும் படையினரின் வருகையை அறிந்த பொதுமக்கள் வீதிகளில் கூடிநின்று தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து ஆரவாரம் செய்தனர். பதிலுக்கு அவர்களும் கையசைத்துத் தமது மகிழ்ச்சியை மக்களுக்குத் தெரிவித்தனர்.

இதேவேளை வவனியா நகரில் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் பொதுமக்கள் மத்தியில் சிவிலுடையில் நின்ற நபரொருவர் இந்தியராணுவ அணியினரைநோக்கி வெற்றுப் போத்தலால் எ றிந் தா ர். ஆனாலும் எவருக்கும்காயமேற்படவில்லை. உடனடியாக இலங்கை ராணுவத்தினர் அந்நபரைப்பிடித்து பொலிஸ்நிலயம் கொண்டுசென்றனர்

இந்திய ராணுவத்தினர் தற்போது வவனியா காமினி வித்தியாலயத்தல் முகாமிட்டுள்ளனர். இவர்கள் நேற்று முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளுக்குச் செனறனர்.

வவனியா நகர் முழுவதும், தற்போது புலிக்கொடிகள் அநேகமாகக் கட்டப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. லொறிகள், கார்களிலும மக்கள் புலிக்கொடிகளைப் பறக்கவிட்டுச்செல்கின்றனர்.

இதற்கிடையில் ஓமந்தை ராணுவமுகாமிற்குள் பெரிய அளவிலான ஒரு புலிக்கொடியும், சென்றியில் ஒரு சிறிய கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளன.

வவனியாவில் இந்திய-இலங்கைக் ஹெலிகொப்டர்களின் நடமாட்டம் அதிகரித்திருக்கக் காணப்பட்டது. சுமார் 12 ஹெலிகொப்டர்கள் இவ்வாறு பறந்துதிரிந்தன. இந்தக் ஹலிகொப்டர்களில் இலங்கை ராணுவத்தினர் கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வடக்கு, கிழக்கில்—
# 4 வருடங்களில் ரூபா 600 கோடி சேதம்

(நமது நிருபர்)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்ற போராட்டங்கள் காரணமாக 600கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக நிதிதிட்டமிடல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு அழிவுகளை புனரமைப்பதற்குத் தேவையான வெளிநாட்டு நிதி உதவியைப் பெறும் நடவடிக்கைகளை நிதி அமைச்சர் தற்போது மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளையில் வடக்கு, கிழக்கு சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக உலக வங்கியின் தூதுக்குழு ஒன்று அடுத்த மாதம இலங்கை வருகிறது. [இ]

## லங்கா சிமெந்து தொழிற்சாலை பொதுமுகாமையாளர் இன்று விஜயம்

[அலுவலக நிருபர்]

காங்கேசன்துறையில் உள்ள லங்கா சீமெந்து தொழிற்சாலையை நான்கு மாதங்களின் பின்னர் மீண்டும் இயங்க வைப்பதற்காக லங்கா சீமெந்து லிமிட்டெட் பொதுமுகாமையாளர் எம். ஜே. டி. எவ். ஜயமானே இன்று காலை காங்கேசன்துறை வரவுள்ளார்.

லங்கா சீமெந்து தொழிற்சாலை அழிவுகளைப்பார்வையிட வரும் திரு. ஜயமானேயுடன் உயர்அதிகாரிகளும் வருகிறார்கள்.

திரு. ஜயமானேயின் வருகையை ஒட்டி லங்கா சீமெந்து லிமிட்டெட், துறைமுக ஊழியர்களை இன்றுகாலை தொழிற்சாலையின் பிரதான வாயிலின் முன் கூடுமாறு தொழிற்சாலையின் பிரதிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்;

காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கடந்த ஏப்ரல் மாதம் 21ம் திகதி முதல் இத்தொழிற்சாலை மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வா)

## கிளிநொச்சி–காங்கேசன் ரயில்சேவை
# 10,000 'சிலிப்பர்' கட்டைகள் தேவை

(கொழும்பு)

கிளிநொச்சியிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையைச் சீரமைப்பதற்கு சுமார் 10,000 சிலிப்பர் கட்டைகள் தேவைப்படுவதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில் பாதையை மட்டும் சீரமைப்பதற்கு 60 லட்சரூபா தேவைப்படுவதாகவும் மற்றும் ரயில்பாலங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், ரயில் நிலையங்கள் ஆகியவற்றைத் திருத்தியமைக்க மேலும் 2 கோடி ரூப தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## மாணவன் பலி

[யாழ்ப்பாணம்]

இலங்கை இராணுவம் வாபஸ்பெற்ற இடங்களைப் பார்க்கச் சென்ற மாணவர் ஒருவர் 'பார்சல் வெடி'க்கு பலியானார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த இ. விஷ்ணுசிவா 13 வயது) என்ற மாணவரே ச்சம்பவத்தில் பலியானர்

கடந்த மாதம் 30ம் தேதி கட்டுவன் பகுதியில் இராணுவம் வாபஸ்பெற்ற பகுதியைப் பார்வையிடச் சென்று வீதியில் கிடந்த பார்சல் ஒன்றை எடுத்து பிரித்தபோது இந்த மாணவன் பலத்தகாயங்களுக்குள்ளானார். இருகைகளும், வலது கண்ணும் சிதைந்ததுடன், நெஞ்சிலும் வயிற்றிலும் எரிகாயங்கள் ஏற்பட்டன. உடனடியாக இவர்யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடு நேற்றுக்காலை மரணமானார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. சேசவன் நேற்று மரண விசாரணை நடத்தினர். தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் நிலைய தாக்குதல் முயற்சி முறியடிப்பு

(நமது நிருபர்)

எம்பிலிப்பிட்டியாவிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ள குட்டிகல என்னுமிடத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தை ஜே. வி. பி. இயக்கத்தினர் தாக்குவதர்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

நீல நில சீருடை அணிந்த குழு ஒன்றே இத்தாக்குதல் முயற்சியை மேற்கொண்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளையில் நொச்சியாகமவில்உள்ள மகாவலி பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து 5 துப்பாக்கிகள் ஆயுதம் தாங்கிய கோஷ்டியினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. [கே]

## கிளிநொச்சி வங்கிக் கொள்ளை
# உமா மற்றும் மூவருக்கு ஆயுள் தண்டனை

[கொழும்பு]

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் மற்றும் மூவருக்கும் நேற்று முன்தினம் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயக்கா ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளை வழக்கிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கின் எதிரிகளாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்த உமாமகேஸ்வரனும் மற்றும் மூவரும் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காத நிலையிலேயே விசாரணை நடைபெற்றது.

ஒவ்வொரு குற்றச்சாட்டின் பேரில் மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தலா 10 வருட கடும் காவல் தண்டனை வழங்கப்பட்டது மேலும் நான்கு எதிரிகளுக்கு தலா 10 வருட கடும் காவல் தண்டனை வழங்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திரு. காசிப்பிள்ளை சின்னத்தம்பி

நெடுந்தீவைச் சேர்ந்த காசிப்பிள்ளை சின்னத்தம்பி கோண்டாவிலில் காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி உதயமலர் [குடும்ப நல சேவையாளர் கோண்டாவில்] கண்ணசலிங்கம் (இத்தாலி) ஆகியோரின் தந்தையும் தங்கவேலுவின் மாமனாரும். காலம் சென்ற இளையதம்பி, காலம் சென்ற இராமநாதன் வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரரும் வள்ளியம்மையின் மைத்துனரும், மோகனும்பிகையின் பேரனுமாவார். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கட்படும்.

(சி-0216) தகவல்: மனைவி, பிள்ளைகள்

### திருமதி. இரத்தினம் மீனாட்சி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல:31, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய இரத்தினம் மீனாட்சி அவர்கள் 01-08-1987ல் காலமானார் அன்னார் டாக்டர் முருகவேள்(U K), டாக்டர் கந்தவேள் (U K), தங்கவேள் (பொறியியலாளர் U K) ஆகியோரின் அருமைத்தாயாரும், கமலேஸ்வரி(ஆசிரியை U K), டாக்டர் இராஜேஸ்வரி (U K), டாக்டர் துவாரகாதேவி (U K) ஆகியோரின் அன்பு மாமியுமாவர் அன்னாரின் ஈமக் கிரியைகள் அவரது இல்லத்தில் (08-08-1987) சனிசகிழமை காலை 10மணியளவில் நடைபெற்று வில்லூண்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்: சி. இராசசேகரம், வேலணை.
(சி 0191)

### மேரி லூட்ஸ் சவிரிமுத்து

சுருவிலைப்பிறப் பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் 57, 4-ம் குறுக்குத்தெருவில் வசிப்பவருமான திருமதி மேரி லூட்ஸ் சவிரிமுத்து (செல்லம்) காலமானார் இவர் காலம்சென்ற திரு திருமதி சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை [விதானையார் சுருவில், ஊர்காவற்றுறை]யின் அன்புமகளும், காலம்சென்ற திரு. பிலிப் சவிரிமுத்துவின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்புமனைவியும், எஸ் ஜே. எல். ஸ்ரனிஸ்லோஸ் (சட்டத்தரணி, கொழும்பு), எஸ். சீ அமிர்தநாயகம் (லண்டன்), ஆன் யூலியட் (ஜெனிவா), மேரி றீசா, பீற்றர் ஜெராட் (அமெரிக்கா). மரீஸ்ரெல்லா, விக்ரர் இம்மானுவேல் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத்தாயாரும், விமலா, ஞானேஸ் (லண்டன்), றூத்திரு பஸ்ரியம்பிள்ளை (ஜெனிவா), டொறத்தி ஜீன் (அமெரிக்கா), சரோஜினி அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்ற அருட்சகோதரிகள் அம்புரோஸ், அடலேயிட் (திருக்குடும்பக் கன்னியர், எஸ். ஏ. சிங்கராயர் (இளைப்பாறிய தபால் அதிபர்), எஸ். ஏ. யோசவ் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்), எஸ் ஏ. பிரான்ஸ் சேவியர் (இளைப்பாறிய கூட்டுறவு பரீட்சகர்), எஸ். ஏ. ஜோண் ஆகியோரின் சகோதரியும், ஜெயந்தி, துளியாந்தி, பிரசாத், மனோகரன். ரேமன்ட், பிறஷாந்தி, ஹரன், அஞ்சலி, பெற்சி, சுத்தி, நான்சி, பிலிப்மத்தியு, சமந்தா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னரது பூதவுடல் 8-8-87 சனிக்கிழமை காலை 8-30மணியளவில் அன்னரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[சி-0217] தகவல்;- திரேசா சவிரிமுத்து,

## மரண அறிவித்தல்

### திருமதி ஹெலன் பாய்க்கியம் குணரட்ணம்
(Nee Miss H P. Mann)
(முன்னுள் சிரேஷ்ட ஆசிரியை யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

திருமதி ஹெலன் பாய்க்கியம் குணரட்ணம்அவர்கள் 04-08-87 காலமானர். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி J R. மேன் அவர்களின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற திரு. கிறிஸ்மஸ் குணரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், Sisters வயலற்மேன், Flori மேன், மணிமேன், திருமதி டெய்சி இராஜா [Canada] செல்வி R. J. மேன் [இளைப்பாறிய அதிபர் M. G. H. S. பருத்தித்துறை], திருமதி இராணி சேவகன் [இந்தியா], திருமதி Joe இராஜசிங்கம் [தலவாக்கொல்லை], திருவாளர் சாமுவேல் மேன் [இளைப்பாறிய தபால் அதிபர்,. திருவாளர் டேவிட் யேசுநாசன்[பண்டாரவளை], ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற C. C. இராஜா [இளைப்பாறிய அதிபர் யா/மன் கல்லூரி உடுவில்), திரு. S. சேவகன் [கணக்காளர், Goldi, கொழும்பு], C. C இராஜசிங்கம் [T. R. I. தலவாக்கொல்லை], புஷ்பம், சவுந்தரராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவர். அன்னரினது இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் (Violet Cottage உடுவில் நாளை சனிக்கிழமை 08-08-87 காலை 9-00 மணிக்கு நடைபெறும் [இதுபிந்திய அறிவித்தல்] ஆராதனையின் பின் இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் சேமக்காலை கொழும்புத்துறையில் அடக்கம் பண்ணப்படுவர். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர், பழைய மாணவர் யாவரும் ஏற்றுககொள்ளும்படி அறியத்தருகிறோம்.

சகோதர - சகோதரிகள்.

தகவல்:- திரு. சாமுவேல் மேன்,
[சி-0220] "Violet Cottage", உடுவில்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B/10036/81. P O. Box: 49. Telegram: Eelanadu. Telephone: 22389, 24126.